# வருடாந்த அறிக்கை 2013

# கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில் வளர்ச்சியில் உங்கள் பங்காளி

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கை.தொ.நி.இன் தரக் கொள்கை | 1 |
| சட்டமும், சட்டவாக்கமும் | 2 |
| ஆணை | 2 |
| நோக்கு | 2 |
| செயற்பணி | 2 |
| முகாமைத்துவச் சபை | 3 |
| தாபனத்தின் அமைப்பு | 4 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 5 |
| தலைவரின் செய்தி | 6 |
| நிறைவேற்று அறிக்கை | 10 |
| செயற்றிறன் சிறப்பம்சங்கள் | 15 |
| உட்கட்டமைப்பு தரம் | 21 |
| கைத்தொழில் தொழில்நுட்ப அபிவிருத்தியைத் துரிதப்படுத்தல் | 23 |
| போட்டித்தன்மைக்கு அடிமட்டக்குறியிடுதல் | 25 |
| மாசுக்களை கண்காணித்தலும், தணித்தலும் | 27 |
| மனித சேமநலனுக்கும், சமூக-பொருளாதார மேம்பாட்டுக்குமான தொழில்நுட்பம் | 28 |
| மகாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் | 29 |
| ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் உற்பத்தித் திறனின் அபிவிருத்தி | 32 |
| புதிய முன்னெடுப்புகள் | 36 |
| பெரு நிறுவனங்களுக்கான விழிப்புணர்வு | 39 |
| கைத்தொழிலுக்கான தகவல் | 42 |
| விருதுகளும், அங்கீகாரமும் | 45 |
| சமூக, சேமநலன் மற்றும் சமயச் செயற்பாடுகள் | 48 |
| வெளியீடுகள், சமர்ப்பணங்கள் மற்றும் ஆக்கவுரிமைகள் | 50 |
| மனித வளங்கள் | 63 |
| நிறைவேற்றுப் பணியாளர் | 66 |

## கை.தொ.நி.இன் தரக் கொள்கை

“தேசிய தரக் கொள்கைக்கு அமைவாக, முழு நிறுவனத்திற்கும் சோதித்தல் மற்றும் மதிப்பாராய்தல் சேவைகளுக்கான ISO 17025 தர முகாமைத்துவ முறைமையையும், ISO 9000 தர முகாமைத்துவ முறைமையையும் பராமரிப்பதற்கு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் உச்ச முகாமைத்துவம் வெளிப்படையாகவே அர்ப்பணிப்பினைக் கொண்டு, வாடிக்கையாளர்களுக்கு ஆகக்கூடுதலான தொழில் முறை நியமங்களின் சேவைகளையும் வழங்குகின்றது.

நிறுவனத்தினுள் தொழிற்படுத்தப்படும் தர முறைமைகள் பற்றி சகல கை.தொ.நி. பணியாளரும் முழுமையாக அறியச் செய்யப்பட்டுள்ளதுடன், ஆகவே, சர்வதேச நியமங்களுக்கு அமைவாக சேவைகளை வழங்குவதற்கு அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளனர்.

தொழில்நுட்பச் சேவைகளுக்கான ISO 17025இன் படி தர முறைமைகளினதும், தர முகாமைத்துவத்திற்கான ISO 9000இனதும் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் வாடிக்கையாளரின் திருப்தியினதும், சேவைகளின் தொடர்கின்ற மேம்படுத்தலினதும் ஆகக்கூடுதலான மட்டத்தைச் சாதிப்பதற்கு நிறுவனத்தின் முழுப் பணியாளரும் முயற்சிக்கின்றனர்.”

## சட்டமும், சட்டவாக்கமும்

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (கை.தொ.நி.) ஒரு நியதியாக்கச் சபை என்பதுடன், இது 1994இன் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் சீரிய பண்பினால் 1998 ஏப்ரல் 01 அன்று நடைமுறைக்கு வந்தது. 1955இல் தாபிக்கப்பட்ட இலங்கை கைத்தொழில் விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (இ.கை.வி.கை.நி.) அடுத்தமைந்த நிறுவனமாக கை.தொ.நி. விளங்குகின்றது. அதன் வாடிக்கையாளர்களுக்கும், பங்குடமையாளர்களுக்கும் சந்தை முனைப்பிலான பங்காளியாக தொழிற்படும் கை.தொ.நி. இலங்கை அரசாங்கத்தினால் தனியான முகாமைத்துவ சபை மூலம் முழுமையாக உரித்தாக்கப்பட்டுள்ள நிறுவனம் என்பதுடன், விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சின் நோக்கெல்லையினுள் தொழிற்படுகின்றது.

## ஆணை

1998 ஏப்ரல் 01 அன்று செயற்பாட்டுக்கு வந்த 1994இன் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டம் பின்வருமாறு எமது கடப்பாட்டினை விபரிக்கின்றது:

"தொழில்நுட்ப நிறுவனம் கிராக்கி செலுத்தலிலானது என இருக்க வேண்டும். துரித கைத்தொழில்மயமாக்கலுக்கு அவசியப்படும் மட்டத்திற்கு இலங்கையில் தொழில்நுட்பத்தின் மட்டத்தை உயர்த்துவதே தொழில்நுட்ப நிறுவனத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்."

## நோக்கு

தேசிய அபிவிருத்திக்கான விஞ்ஞான மற்றும் கைத்தொழில் ஆராய்ச்சியில் சிறந்த கேந்திரமாக திகழுதல்.

## செயற்பணி

புத்தாக்க ஆராய்ச்சி அபிவிருத்தியை மேற்கொள்ளலும், இலங்கை மக்களின் நலனுக்காக துரித கைத்தொழில்மயமாக்கல் ஊக்குவிப்புக்கான சர்வதேசரீதியில் போட்டிக்குரிய தொழில்நுட்பச் சேவைகளையும் வழங்குதல்.

# முகாமைத்துவச் சபை

**தலைவர்**

பேராசிரியர் டபிள்யு. அபேவிக்கிரம
*ஒட்டுண்ணியல் பேராசிரியர்*
*மருத்துவப் பீடம், களனி பல்கலைகழகம்*

**உறுப்பினர்கள்**

கலாநிதி ஜி.எ.எஸ். பிரேமகுமார
*பணிப்பாளர் நாயகம்/பி.நி.உ., கை.தொ.நி. – உத்தியோகப்பற்றற்ற*

திரு.அசேல இடவெல
*உதவித் தலைவர், நிலைத்திருத்தல் அபிவிருத்தி, வெளிவாரி விவகாரங்கள்*
*ஹொல்சிம் (லங்கா) லிமிற்.*

கலாநிதி என்.வி.சந்திரசேகரன்
*சிரேஷ்ட விரிவுரையாளர், இரசாயனவியல் திணைக்களம்*
*விஞ்ஞான பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்*

பேராசிரியர் சுதந்த லியனகே
*பீடாதிபதி, பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்*
*ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்*

கலாநிதி ஷாந்த அமரசிங்க
*சிரேஷ்ட விரிவுரையாளர், இரசாயன, செய்முறை எந்திரவியல் திணைக்களம்*
*மொறட்டுவைப் பல்கலைக்கழகம்*

திரு.மகேந்ரா ஜயசேகர
*முகாமைத்துவப் பணிப்பாளர்*
*லங்கா ரைல்ஸ் PLC*

திரு.டபிள்யு.டி.ஜயசிங்க
*மேலதிகச் செயலாளர்*
*கைத்தொழில், வர்த்தக அமைச்சு*

திருமதி எஸ்.எம்.ராஜபக்ஸ
*உதவிப் பணிப்பாளர், பொது வியாபார முயற்சிகள் திணைக்களம்*
*நிதி, திட்டமிடல் அமைச்சு*

**சபைக்கான செயலாளர்**

திருமதி ரேணுகா ஜயதிலக
*நிறுவனத்தின் செயலாளர்*

# தாபனத்தின் அமைப்பு

**தலைவர் மற்றும் முகாமைத்துவச் சபை**

**பணிப்பாளர் (பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்)**

**முகாமைத்துவக் குழு**

**கொள்கை ஆலோசனைக் குழு**

- **உயிரகத் தொழில்நுட்ப அலகு (BTU)**
- **ஆராய்ச்சி, அபிவிருத்திப் பிரிவு (R&D)**
  - உணவுத் தொழில்நுட்பப் பிரிவு (FTS)
  - மூலிகைத் தொழில்நுட்பப் பிரிவு (HTS)
  - பொருட்கள் தொழில்நுட்பப் பிரிவு (MTS)
  - சூழல் தொழில்நுட்பப் பிரிவு (ETS)
- **தொழில்நுட்பச் சேவைகள் பிரிவு (TS)**
  - இரசாயன, நுண்ணுயிரியல் ஆய்வுகூடம் (CML)
  - பொருட்கள் ஆய்வுகூடம் (ML)
  - கைத்தொழில் எடையளவியல் ஆய்வுகூடம் (IML)
  - மின் தொழில்நுட்ப ஆய்வுகூடம் (ETL)
- **தகவல் சேவைகள் நிலையம் (ISC)**
- **நிருவாக, செயற்பாட்டுப் பிரிவு (A&O)**
  - மனித வளங்கள் திணைக்களம் (HRD)
  - சந்தைப்படுத்தல், வியாபார அபிவிருத்தித் திணைக்களம் (MBD)
  - போக்குவரத்து அலகு (TU)
  - எந்திரவியல் சேவைகள் (ES)
- **நிதித் திணைக்களம் (FD)**
  - களஞ்சியம் (STO)
  - விநியோகங்கள் (SUP)
- **தர உறுதிப்படுத்தல் திணைக்களம் (QAD)**
- **உள்ளகக் கணக்காய்வு (IA)**
- **கணனி அலகு (CU))**

# சிரேஷ்ட முகாமைத்துவம்

**பணிப்பாளர் நாயகம்/பி.நி.உ.**
கலாநிதி ஜி.எ.எஸ்.பிரேமகுமார

**மேலதிகப் பணிப்பாளர், தொழில்நுட்ப சேவைகள்**
திரு.எ.எஸ்.பன்னில

**மேலதிகப் பணிப்பாளர், ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்**
கலாநிதி ஜே.கே.ஆர்.ஆர்.சமரசேகர

**மேலதிகப் பணிப்பாளர், நிருவாகமும், செயற்படுத்தலும்**
திரு.டி.சி.எ.சத்துருகல்சிங்க

**ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்**

கலாநிதி இல்மி ஜி.என்.ஹேவாஜுலிகே
*சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்,*
*உணவு தொழில்நுட்பப் பிரிவு*

*சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்,*
*மூலிகை தொழில்நுட்பப் பிரிவு*
*(வெற்றிடம்)*

கலாநிதி ஐ.ஆர்.எம்.கோட்டேகொட
*தலைவர், பொருட்கள் தொழில்நுட்பப் பிரிவு*

திரு.எச்.என்.குணதாச
*சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்,*
*சூழல் தொழில்நுட்பப் பிரிவு*

**உயிரக தொழில்நுட்ப அலகு**

கலாநிதி எஸ்.ஜி.சேனாரத்ன
*தலைவர், உயிரகத் தொழில்நுட்ப அலகு*

**தகவல் சேவைகள் நிலையம்**

*சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்,*
*தகவல் சேவைகள் நிலையம்*
*(வெற்றிடம்)*

**உள்ளகக் கணக்காய்வு**

திரு.கே.எ.எஸ்.பி.களுஆரச்சி
*பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்*

**நிதித் திணைக்களம்**

திரு.ஜோன்சன் சொலமன்
*சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்,*
*நிதித் திணைக்களம்*

**தொழில்நுட்பச் சேவைகள்**

திரு.ஜே.கே.எ.பீ.விஜேகுணசேகர
*தலைவர்,*
*இரசாயன, நுண்ணுயிரியல் ஆய்வுகூடம்*

திரு.ஜே.எம்.எஸ்.ஜயதிலக
*சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்,*
*பொருட்கள் ஆய்வுகூடம்*

கலாநிதி டபிள்யு.எம்.எஸ்.விஜேசிங்க
*தலைவர்,*
*கைத்தொழில் அளவியல் ஆய்வுகூடம்*

திரு.ஆர்.எம்.வீரசிங்க
*தலைவர், மின் தொழில்நுட்ப ஆய்வுகூடம்*

**தர உறுதிப்படுத்தல் திணைக்களம்**

திரு.எச்.பி.பி.எஸ்.சோமசிறி
*பொறுப்பதிகாரி, தர உறுதிப்படுத்தல் திணைக்களம்*

**நிருவாகமும், செயற்படுத்தலும்**

*சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்,*
*நிருவாகம், மனித வளங்கள்*
*(வெற்றிடம்)*

திருமதி மனோரி விஜேமான்ன
*சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்,*
*சந்தைப்படுத்தல், வியாபார அபிவிருத்தி*

திரு.எ.எஸ். ஆராச்சி
*தலைவர், பொறியியல் சேவைகள்*

**நிறுவனத்தின் செயலாளர்**

திருமதி ஏ.எம்.கே.ஆர்.ஜயதிலக்க

- 2013 டிசம்பர் 23 வரை தகவல் சேவைகள் நிலையத்தின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளராக திரு.சுரனி சமரசேகர சேவையாற்றினார்
- 2013 நெவம்பர் 30 வரை மனித வளங்கள் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளராக திரு.திலக் சமரசேகர சேவையாற்றினார்

## தலைவரின் செய்தி

கை.தொ.நி.இன் முன்னாள் தலைவர் பேராசிரியர் விஜய குமாரின் நியமன காலத்தின் முடிவுடன், 2013 ஜூலை 30 அன்று கை.தொ.நி.இன் தலைவராக நான் கடமைகளை ஏற்றுக்கொண்டேன்.

எதிர்காலத்திற்கான செயற்றிட்டத்திற்கான தொலைநோக்கான மகிந்த சிந்தனையில் முன்வைக்கப்பட்டிருந்த நோக்கங்களுக்கு அமைவாகவும், தொழில்நுட்ப, ஆராய்ச்சிக்கான அமைச்சர் கௌரவ பாட்டலி சம்பிக ரணவக்கவினால் அறிவுறுத்தப்பட்டவாறும், சுய நம்பிக்கையிலான பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்காக அதிகரித்த வருமானத்துடனும், குறைவடைந்த செலவினத்துடனும் உணவு மற்றும் போஷாக்குப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி, உள்நாட்டுப் பொருளாதார அலகொன்றாக ஒவ்வொரு குடித்தனத்தையும் மாற்றியமைக்கும் குறிக்கோளுடன், கமத்தொழில், கால்நடை மற்றும் குடிசைக் கைத்தொழில்கள் ஆகியன ஊடாக, சனசமூகத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்துமுகமாக சிறிய, நடுத்தர வியாபார முயற்சிகளின் ஆற்றலளவைத் தரமுயர்த்தும் சவாலைத் தொழில்நுட்பத்தினதும், அறிவு கைமாற்றத்தினதும் ஊடாக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் ஏற்றுக்கொண்டது.

செயற்திறன்மிக்க வேலைப்படையொன்றுக்கான திறமை மிக்க சூழலொன்றை உருவாக்குவதில் கௌரவ அமைச்சரின் தொலைநோக்குக்கு அமைவாக, 5S செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், பொறுப்பு அலுவலர் ஒருவருடன் ஒரு புறம்பான 5S அலகு தாபிக்கப்பட்டது.

SDD (HTS) என்ற தனது முன்னைய பதவிநிலையிலிருந்து மிகவும் குறுகிய காலமொன்றுக்காக மேலதிகப் பணிப்பாளர் (R&D) பதவிநிலையில் வைக்கப்பட்டிருந்த கலாநிதி சிறிமல் பிரேமகுமார 2013 ஜனவரி 4இலிருந்து செயற்படத்தக்கதாக கை.தொ.நி.இன் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். மேலதிகப் பணிப்பாளர் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்ற பதவிநிலைக்கு 07.01.2013 அன்று கலாநிதி ராதிகா சமரசேகர நியமிக்கப்பட்டார். இவ்வாறாக, நிறுவனத்தில் நிலவிய சகல மூன்று மேலதிகப் பணிப்பாளர் பதவிநிலைகளை நிரப்ப கை.தொ.நி.இனால் இயலக்கூடியதாக இருந்தது.

வீதி ஒளிவிளக்கு கட்டுப்பாடு முறைமை மற்றும் குறைந்த ஆகுசெலவிலான செம்மையான காது விபரப்படுத்தல் கருவி ஆகியன மீது கை.தொ.நி.இன் ETLஇனால் விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பம் இலங்கை கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த சஹஸக் நிமயும் பொருட்காட்சியில் முறையே இரண்டாவது மற்றும் முதலாவது பரிசுகளை வெற்றியீட்டின.

2013 மே மாதத்தில், கானா, Accra 16ஆவது ஒன்றிணைப்புக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டவாறு, தெற்கில் நிலைத்திருத்தல் அபிவிருத்திக்காக COMSATS சர்வதேச விஞ்ஞான, தொழில்நுட்ப நிலையங்களின் வலைப்பின்னலின் உறுப்பொன்றாக கை.தொ.நி. செயற்பட்டது.

கை.தொ.நி. ஊழியர்களின் மருத்துவத் தேவைகளைக் கரிசனைக்கெடுத்து, இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் அதன் பணியாளருக்காக பங்களிப்பிலான மருத்துவக் காப்புறுதித் திட்டமொன்றை வெற்றிகரமாக அமுலாக்குவதற்கு நிறுவனத்தினால் இயலக்கூடியதாக இருந்தது. இது மிகவும் அவசியமான நகர்வு என்பதுடன், நீண்ட காலம் எதிர்பார்க்கப்பட்ட தேவைப்பாடொன்றுமாகும்.

பணியாள் உறுப்பினர்களின் உசாவுகைச் சேவைகளுக்காக ஒரு சிறிய அளவுக்கு PF 380 சுற்றுநிருபம் அமுல்படுத்தப்பட்டது. இவ்வாறாக, அவர்களினால் அளிக்கப்பட்ட அத்தகைய சேவைகளை மேம்படுத்துவதில் அவர்களின் முயற்சிகளில் ஆராய்ச்சியாளர் வளமாக்கப்பட்டார்கள்.

பேச்சு வினைத்திறன் செயற்றிட்டத்தின் ஊடாக பட்டத்தைப் பெற்றவர்களாகவும், பட்டய பொது மதிப்பாய்வாளர்களாகவும் விளங்கும் 20 பணியாள் உறுப்பினர்களைச் சேர்த்துக்

கொள்வதன் மூலம் அதன் பொது மதிப்பாய்வாளர் கழகத்தின் அமைப்புக்காக கை.தொ.நி.இனால் அவசியமான அடித்தளம் இடப்பட்டது.

2012இல் விளங்கிய ரூ.159.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2013இல் ரூ.207.5 மில்லியன் என நிறுவனத்தின் சம்பாத்தியங்கள் 30.25%ஆல் வளர்ச்சியடைந்தது. கடந்த மூன்று வருடங்களில் வருமானத்தின் அதிகரிப்புடன் ஒப்பிடும் போது, 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் முறையே 7.8% மற்றும் 17.3%ஆனவை வருமானத்தின் முன்னைய வருடங்களின் அதிகரிப்புக்கு எதிராக 30.25%ஐக் கொண்ட பாராட்டத்தக்க வருமான அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்துள்ளது.

முன்னைய ஆண்டின் ரூ.124.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூ.160 மில்லியன் என்ற அதன் வருமானத்தின் அதிகரிப்புடன் கூடுதலான வருமானம் ஈட்டிய பிரிவாக தொழில்நுட்பச் சேவைகள் பிரிவு தொடர்ந்துமிருந்தது. ஒப்பந்தக் கருத்திட்டங்களிலிருந்து வருமானமானது 2012இல் ரூ.8.1 மில்லியனாக விளங்கி, 2013இல் ரூ.12.4 மில்லியனுக்கு கணிசமானளவு அதிகரித்தது.

ஒரு வெற்றிகரமான கருத்திட்டமான மழைமானி இயந்திரமொன்றுக்கான தொழில்நுட்பமொன்றை கைமாற்றுவதன் மூலம், அதன் புதுமாற்றத்திலானதும், ஆராய்ச்சியிலானதுமான செயற்பாடுகளை எடுத்துக்காட்டியமை தொழில்நுட்பச் சேவைகள் பிரிவினால் செய்துகாட்டப்பட்ட ஒரு விசேட அம்சமாகும்.

இவ்வாறே தொழில்நுட்பக் கைமாற்றத்தின் சம்பாத்தியங்களும் முன்னைய வருடத்தில் விளங்கிய ரூ.2.8 மில்லியனிலிருந்து 2013ஆம் ஆண்டில் ரூ.3 மில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், மீளவரும் செலவினத்திற்கான சம்பாத்தியங்களின் விகிதமானது கடந்த வருடத்தில் சாதிக்கப்பட்ட 94.5%இலிருந்து 2013இல் 87%க்கு குறைவடைந்தது. 2013இல் ஆளணியினர் வேதனங்கள் ரூ.51.4 மில்லியனால் அல்லது 25%ஆல் அதிகரித்தது. இது பெரிதுமே புதிய சம்பளத் திட்டங்களினதும், அங்கீகரிக்கப்பட்ட SORஇனதும் முழுமையான அமுலாக்கத்தின் காரணமாகவுள்ள அதேவேளை, மொத்த மீளவரும் செலவினத்தில் 19.3%ஐக் கொண்ட அதிகரிப்பானது பொருளாதாரத்தில் பணவீக்கத்தையும், வெளிநாட்டுச் செலவாணி நகர்வுகளையும் பிரதிபலித்தது. இந்த முன்னேற்றங்கள் 2013இல் 0.06%இனால் ஊழியர் ஒருவரின் செலவினத்தில் அதிகரிப்பொன்றுக்கு இட்டுச்சென்றன. இது ஒவ்வொரு ஊழியரினாலும் தோற்றுவிக்கப்பட்ட வருமானத்தில் காட்டப்பட்டுள்ள 0.09% அதிகரிப்பினை விட மிகவும் அதிகளவாகும்.

மாலம்பேயில் கை.தொ.நி.க்கான புதிய அமைவிடத்தில் நிருவாகத் தொகுதியும், கம-உணவுத் தொழில்நுட்பத் தொகுதியின் அதிகளவும் முடிக்கப்பட்டுள்ளன. கை.தொ.நி.இனால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் கம-உணவுத் தொழில்நுட்பக் கட்டிடத்தின் மேலதிகத் தளங்களை நிருமாணிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.

அமைவிடத்திற்கான சந்திரிகா குமாரணதுங்க மாவத்தையிலிருந்து வீதியும், பாலமும் இந் நோக்கத்திற்காக அவசியமான மேலதிகமான காணியைக் கையகப்படுத்திய பின்னர் முடிக்கப்பட்டுள்ளது. உயர்தர பொருட்கள் தொகுதிக்கான நிதியங்களைப் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் வெற்றிகரமான கலந்துரையாடல்களை நிறுவனம் நடத்தியிருந்தது.

விஞ்ஞானி மற்றும் விஞ்ஞானி சாராத தரத்திலான பணியாளரைக் கவர்வதற்கும், தக்கவைத்திருப்பதற்கும் நிறுவனத்தினால் இன்னுமே முடியாதிருக்கின்றது. இதற்கு பெரிதுமே ஆராய்ச்சிப் பணியாளருக்கு வழங்கப்படும் அரசாங்கச் சம்பளங்களும், தொழிலின் நியதிகளும் போட்டிக்குரியவையல்ல என்பதே காரணமாகும். இருந்த போதிலும், ஆராய்ச்சிப் படி (திறைசேரி உதவிதொகைகளினால் நிதிப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களுக்கு கூட) மற்றும் ஆராய்ச்சிச் சம்பாத்தியங்களின் பங்கீடு போன்ற பெருமளவு முன்னெடுப்புகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், இவற்றை வெற்றியீட்டுவதற்கு தடைகள் உள்ளன. எனினும், ஆராய்ச்சிப் பணியாளரின் எண்ணிக்கைகள் குறைவடைந்துள்ளமையினால் அதன் தாக்கம் மிகவும் பாரியதல்ல. எனினும், பதவியுயர்வுகளினதும், நியமனங்களினதும் தொடர்பில் மேன்முறையீடுகளை முடிப்பதைக் கவனிப்பதில் துரிதப்படுத்தப்பட்ட

திட்டமொன்றுடன் தேங்கிக் கிடப்பவை நான்கு மாதங்கள் கொண்ட குறுகிய காலமொன்றினுள் முடிக்கப்பட்டன.

அதன் செயற்றிறன் ஊக்குவிப்புத் திட்டத்தையும், விஞ்ஞானிகளுக்கான ஊக்குவிப்புத் திட்டத்தையும் நிறுவனம் தொடர்ந்தது. ஊழியர் உறவுகள் சிறந்ததாக விளங்கின.

பரந்த வீச்செல்லையிலான சர்வதேசரீதியிலும், உள்நாட்டுரீதியிலும் தத்துவமளிக்கப்பட்ட ஆய்வுகூடச் சேவைகளை வழங்குவதன் மூலம், இலங்கையின் கைத்தொழிலுக்கு உதவியளிப்பதில் பாரிய வகிபங்கொன்றை ஆற்றுவதை கை.தொ.நி. தொடர்ந்தது. கை.தொ.நி.இல் 7 பாரிய பிரிவுகளில், 3 பிரிவுகள் SWEDAC மற்றும் SLAB தத்துவமளிக்கப்பட்டவையாக உள்ள அதேவேளை, ஒரு பாரிய பிரிவானது SLAB என்ற இலங்கை முகவராண்மையினால் தத்துவமளிக்கப்படுகின்றது. மேலும், 130க்கு மேற்பட்ட சாராமாறிகள் SWEDAC தத்துவமளிக்கப்பட்டவையாகும்.

கைத்தொழிலுக்கு பரந்த வீச்செல்லையிலான மதிப்பாராய்தல் சேவைகளை வழங்குவதன் மூலம், உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு நிறுவனம் ஆதரவளித்தது. சில புதுமையான அம்சங்களுடன் அளவிடும் நாடா மதிப்பாராய்தல் கருவியொன்றின் புதிய கண்டுபிடிப்பே மதிப்பாராய்தல் சேவைகளுக்கான ஒரு புதிய சேர்ப்பாகும்.

கடல்கடந்த நாடுகளின் ஆய்வுகூடங்களுக்கு சேவைகளை வழங்குவதன் மூலமும், வெளிநாட்டு விஞ்ஞானிகளுக்கு நுண்ணுயிரியல் பகுப்பாய்வில் தர முகாமைத்துவம் மீது பயிற்சிச் செயற்றிட்டங்களை நடத்துவதன் மூலமும் அதன் சர்வதேச பெறுமதியைக் கை.தொ.நி. பராமரித்தது.

பிரயோகத் தொழில்நுட்பங்களைக் கைமாற்றுவதை அமுலாக்குவதற்கும், கைத்தொழிலுக்கு அதனைக் கைமாற்றுவதற்குமான வழிவகைகளாக சந்தைப்படுத்தல் முகாமையாளரின் அதிகளவு அவசியப்படுத்த வெற்றிடமொன்று நிரப்பப்பட்டது.

நாடு முகங்கொடுக்கும் முக்கிய பிரச்சனைகள் மீதும், கைத்தொழிலினால் முகங்கொடுக்கப்பட்ட பிரச்சனைகள் மீதும் ஆராய்ச்சியை மேற்கொள்வதை கை.தொ.நி. தொடர்ந்தது. பால் உற்பத்திப்பொருட்களுக்கு DCD சோதித்தல் துறையில் கை.தொ.நி.இனால் ஆற்றப்பட்ட வகிபங்குக்குப் புறம்பாக, இப்பணியினதும், இயற்கையான பிரச்சனைகள் தொடர்பில் நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்படுகின்ற புதிய முன்னெடுப்புக்களினதும் சிறப்பம்சங்கள் வருடாந்த அறிக்கையின் தொடர்ந்துவரும் பக்கங்களில் விபரிக்கப்பட்டுள்ளன.

ரத்துபஸ்வல மற்றும் ஹன்வெல்ல ஆகியவற்றில் கைத்தொழில் தீழ்ப்பு தொடர்பில் சூழல் மாதிரிகளின் பகுப்பாய்வானது கை.தொ.நி. சம்பந்தப்பட்டுள்ள இரு அத்தகைய பாரிய தேசிய பிரச்சனைகளாகும். அத்தகைய பிரச்சனைகளில் கை.தொ.நி.இன் சம்பந்தத்தையிட்டு அரசாங்க அத்துடன் தனியார் துறைகள் மற்றும் நீதித்துறை ஆகியன வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இது மறுபுறத்தில், கை.தொ.நி. மீது சொல்லப்பட்ட பங்காளர்கள் வைத்துள்ள தன்னம்பிக்கையையும், நம்பிக்கையையும் பிரதிபலிக்கின்றது. கைத்தொழில் தீழ்ப்பின் தாக்கங்களைக் கண்காணிப்பதற்கும், தணிப்பதற்கும் கைத்தொழிலுக்கு உதவியளிப்பதில் பாரிய வகிபங்கொன்றை நிறுவனம் ஆற்றுகின்றது. அறிக்கையில் மிகவும் அதிகளவில் விபரிக்கப்பட்டுள்ளவாறு, புதிதாகக் கட்டப்பட்ட கப்பல்கள், நெடுஞ்சாலைகள், வளிமண்டல வெளியேற்றங்கள் மற்றும் திண்மக் கழிவு மற்றும் கழிவு நீர் முகாமைத்துவம் ஆகியன உட்பட இரைச்சல் மற்றும் அதிர்வு தீழ்ப்பு ஆகிய துறைகளில் இப்பணி இருந்துள்ளது.

டெங்கு நுளம்புகளுக்கு உத்தேசமான வளர்ப்பிடங்களின்றி, சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு தொற்றுதலிலிருந்து தடுப்பு மீது பணியாளர் மத்தியில் விழிப்பியல் திட்டங்களை நடத்துவதற்குப் புறம்பாக, தேசிய ஆராய்ச்சி மன்றத்திலிருந்து நிதிப்படுத்தல் ஊடாக டெங்கு காவி கட்டுப்படுத்தும் இலக்கு முனைப்பிலான பாரிய கருத்திட்டமொன்றில் பங்காளர் ஒருவராக தற்போது கை.தொ.நி. சம்பந்தப்பட்டுள்ளது.

நாட்பட்ட சிறுநீரக நோயிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான ஒரு முன்னெடுப்பாக, பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் மத்தியில் பங்கிடும் பொருட்டு ஆகுசெலவு குறைந்த சிவந்த களிமண் வடிகட்டியொன்றை கை.தொ.நி. விருத்திசெய்துள்ளது. இது புளோரைட் மற்றும் ஆர்சனிக், கட்மியம் போன்ற பாரமான உலோகங்கள் ஆகியவற்றை வடிகட்டும் புதுமையான அம்சத்தைக் கொண்டுள்ளது. மேலும், சோதித்தலுடன், கிட்டிய எதிர்காலத்தில், சந்தைக்கு கை.தொ.நி. வர்த்தகக் குறியுடன் இந்த வடிப்பானை விடுவிப்பதற்கு கை.தொ.நி.க்கு இயலக்கூடியதாக இருக்கும்.

தனியார் துறையுடன் கை.தொ.நி.இன் வசதிகளையும், உபகரணங்களையும் பரிமாறிக்கொள்ளும் போது, கை.தொ.நி.இனால் பரிமாறல் வருமானத்தின் மாதிரியொன்று தாபிக்கப்படும். இது எதிர்காலத்தில் அத்தகைய பங்காண்மைகளின் பெரும்பாலானவை மீது பயன்படுத்தப்படும்.

பணியின் போது வேறு ஆற்றலளவுகளில், கை.தொ.நி.இல் ஒரு தொகையிலான ஆண்டுகளைக் கொண்ட அனுபவத்தைக் கொண்டுள்ள புதிதாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் நாயகம்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் கலாநிதி சிறிமல் பிரேமகுமார நிறுவனத்திற்கு தலைமைத்துவத்தை வழங்கினார். சபையின் சார்பாக, நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற ஆற்றலளவில் தனது குறுகிய காலத்தின் போது நிறுவனத்திற்கு அளித்த அவரது உதவிக்காக அவருக்கு நன்றி கூறுவதற்கு இந்த வாய்ப்பினை நான் எடுத்துக்கொள்கிறேன்.

அவசியம் தோன்றிய போதெல்லாம் அவர்கள் வழங்கிய ஆதரவுக்காக கை.தொ.நி.இன் முன்னாள் தலைவருக்கும், பணிப்பாளருக்கும் நான் நன்றி கூற விரும்புகின்றேன்.

நாட்டில் முதன்மையான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனமாக கை.தொ.நி.இன் நிலையைப் பராமரிப்பதற்கு உதவியளித்தமை மட்டுமன்றி, நம்பகமான ஆராய்ச்சிப் பங்காளியொன்றாக நிறுவனத்தின் ஆற்றலளவுகள் மீது நிறுவனத்தில் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் தமது பிரயத்தனங்களுக்காக தமது முயற்சிகளுக்காக நிறுவனத்தின் பணியாளருக்கும், முகாமைத்துவத்திற்கும் நான் நன்றி கூற விரும்புகின்றேன்.

பேராசிரியர் டபிள்யு. அபேவிக்ரம
தலைவர்

## நிறைவேற்று அறிக்கை

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது நிறுவனம் பாராட்டத்தக்கதாகச் செயற்பட்டது. இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சில குறிப்பிடத்தக்க ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பச் சேவைகள் முனைவுபடுத்தப்பட்டுள்ளன.

### கைத்தொழில் தொழில்நுட்பத்தின் மட்டத்தை உயர்த்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

### தொழில்நுட்பக் கைமாற்றல்கள்

மழை மானியின் புனைவில் தொழில்நுட்பத்தைக் கைமாற்றுவதற்கு CIVICON என்ஜினியரிங் (பிறை.) லிமிற்றெற்றுக்கும், கை.தொ.நி.க்கும் இடையில் ஆக்கவுரிமையுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. தன்னியக்கத்திலான மழை மானி முதலில் 2007இல் விருத்திசெய்யப்பட்டதுடன், நம்பகத்தன்மையையும், செம்மையையும் அதிகரித்து தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டது. பழங்களிலும், மரக்கறிகளிலும் Coleopteran பூச்சிகளுக்கான உள்நாட்டு *Bacillus thuriengensis*ஐப் பயன்படுத்தி பூச்சிக் கட்டுப்பாட்டுக்காக விருத்திசெய்யப்பட்ட தொழில்நுட்பம் பயோ பவர் லங்கா (பிறை.) லிமிற்றெற்றுக்கு கைமாற்றப்பட்டது.

ஆண்டின் போது, புடவை சாயமூட்டல் பொறியிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவுநீரின் பரிகரிப்புக்காகவும், வாகன சேவைப்படுத்தல் நிலையத்திலிருந்து தோற்றுவிக்கப்பட்ட கழிவுநீரின் பரிகரிப்புக்காகவும் முந்திய வருடங்களில் பொறுப்பேற்கப்பட்ட இரு உடனடியாகப் பயன்படுத்தத்தக்க ஒப்பந்தங்கள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன.

**விஞ்ஞானத்தினதும், தொழில்நுட்பத்தினதும் ஊடாக சிறிய மற்றும் நுண் வியாபார முயற்சிகளை மேம்படுத்தல்:** *விதாத* மற்றும் *திவிநெகும* செயற்றிட்டங்களில் தீவிரமாகப் பங்கெடுப்பதன் மூலம், கிராமியப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான செயற்பணியில் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதனை கை.தொ.நி. தொடர்ந்தது. மூலிகைக் களிம்பு மற்றும் எண்ணெய்கள், இஞ்சியிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப்பொருட்கள், இஞ்சியில் நீரகற்றல் போன்ற பலதரப்பட்ட தொழில்நுட்பங்கள் மீது முது பயிற்றுனர்களாக விதாத நிலையங்களைச் சேர்ந்த பெருமளவு அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். *திவி நெகும* செயற்றிட்டத்தின் கீழ், மட்டக்களப்பு, பொலன்னறுவை, காலி மற்றும் குருநாகல் ஆகியவற்றில் நடைபெற்ற செயற்றிட்டங்களில் 200க்கு மேற்பட்ட நபர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். *திவிநெகும* வங்கியாடல் 'கிளினிக்'குகள், பொருள் பங்கீடு மற்றும் கூருணர்வுப்படுத்தல் செயற்றிட்டங்கள் ஆகியவற்றை நடத்துவதில் மத்தியஸ்தத்தை கை.தொ.நி. தொடர்ந்தது.

கிராம மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக அரசாங்கத்தினதும் மற்றும் சர்வதேச தாபனங்களினதும் அனுசரணையுடன் சிறிய, நடுத்தர வியாபார முயற்சிகளுக்கு தொழில்நுட்பத்தைக் கைமாற்றுவதற்காக பெருமளவு பயிற்சிச் செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மீன் உற்பத்திப்பொருட்களைப் பதப்படுத்தல், அரிசி அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள், போத்தலடைக்கப்பட்ட நெத்தலிக் கருவாட்டின் பதப்படுத்தல், கித்துள் குடிபானங்கள் மற்றும் கித்துள் ஜெலி ஆகியனவையே ஆண்டின் போது நடத்தப்பட்ட உயர் கிராக்கியிலான செயற்றிட்டங்களில் சிலவாகும்.

## சர்வதேசரீதியில் போட்டிக்குரிய தொழில்நுட்பச் சேவைகளின் ஏற்பாடு

**கைத்தொழிலின் போட்டித்தன்மையை மேம்படுத்தல்:** நாட்டில் முன்னணிவாய்ந்த சோதித்தல் மற்றும் மதிப்பாராய்தல் ஆய்வுகூடங்களில் ஒன்றாக, BOI, CEA, பூச்சிநாசினிகள் பதிவாளர், மீன்பிடித்தொழில் திணைக்களம், உரச் செயலகம், சுங்கம் மற்றும் தேயிலைச் சபை போன்ற ஒழுங்குபடுத்தல் உறுப்புக்கள் உட்பட 2,000க்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சுமார் 12,000 சோதித்தல் மற்றும் மதிப்பாராய்தல் சேவைகளும், 40 உபகரண பழுதுபார்த்தல்களும் கை.தொ.நி.இனால் வழங்கப்பட்டது. மேலதிகமாக, ஆய்வுகூட QMS, கைத்தொழில் எடையளவியல், உணவுப் பாதுகாப்பு (HACCP), ISO 17025, ISO 15819, (மருத்துவச் சோதனை) ஆகியவற்றில் பயிற்சியும் கைத்தொழில் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

பலதரப்பட்ட வீச்செல்லையிலான சோதித்தல் மற்றும் மதிப்பாராய்தல் சேவைகளுக்காக SWEDAC மற்றும் SLAB ஆகிய இரண்டிலிருந்தும் ISO/IEC 17025 தத்துவமளிப்பு நிலையைப் பராமரிப்பதனை கை.தொ.நி. தொடர்ந்தது. SLABஇலிருந்து இரைச்சல் அளவீட்டுக்கான தத்துவமளிப்பு நிலையும் பராமரிக்கப்படுகின்றது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வுகூடங்களும், தகவல் சேவை நிலையமும் தொடர்ந்துமே தமது ISO 9001-2008 சான்றுப்பத்திர நிலையைப் பராமரித்தன.

சில முன்னணிவாய்ந்த வைத்தியசாலைகளுக்கு மதிப்பாராய்தல் சேவைகளை வழங்குவதையும் கை.தொ.நி. தொடர்ந்தது. இவ்வாறாக, நாட்டில் நோயாளர்களுக்கு வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கைகளின் அதிகளவு அவசியமான செம்மைப்படுத்தலுக்கு பங்களித்தது.

ஆண்டின் போது, கைத்தொழில்களினால் விளைவிக்கப்பட்ட வளி, நீர், திண்மக் கழிவு மற்றும் இரைச்சல் தீழ்ப்பு ஆகியவற்றினைக் குறைந்தபட்சமாக்குவதற்காக 130 சூழல் உசாவுகைகள் பொறுப்பேற்கப்பட்டன. தீழ்ப்புக் கட்டுப்பாட்டு முறைமைகளின் வடிவமைப்பு, மதிப்பாய்வுச் செயற்றிறன், பரவுகை மாதிரிப்படுத்தல், காற்றோட்ட முறைமைகளை மேம்படுத்தல், தகனவெரிப்பு முறைமைகளின் செயற்றிறன் மதிப்பாய்வு ஆகியனவற்றை சேவைகள் உள்ளடக்கியிருந்தன. எமது சேவைகளை பலதரப்பட்ட வீச்செல்லையைக் கொண்ட கைத்தொழில்கள் பெற்றன. வாகன சேவைப்படுத்தல் நிலையங்கள், மோட்டார் கராஜ்கள், இறப்பர் வல்கனைசுபடுத்தல் அலகுகள், பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொதி தயாரித்தல் பொறிகள், மரத்தளபாட தீந்தையடித்தல் தொழிற்பாடு, தீந்தை மற்றும் மரம் பூச்சியியல் தயாரிப்புப் பொறி, ஈய ஒக்சைட் தயாரிப்புப் பொறி, MDF பலகை தயாரிப்புப் பொறி, அரிசி ஆலைகள், ரயர் மெழுகிடுதல் செயற்பாடு, பூச்சிநாசினி தூள் பொதிப்படுத்தல் பொறி, உயிரகத்திரள் கொதிகலன்கள் மற்றும் நிலக்கரி எரித்தல் பொறி, உலோகம் உருக்குதல் பொறிகள், உடன் தயார்நிலையிலான அசுப்பாத்து பொறிகள், கறுவா இலை கொதிகலன்கள், கோழி கழிவு உருப்படுத்தும் பொறி ஆகியவையே சில சேவைகள் ஆகும்.

## சனசமூக நலனையும், சுகாதாரத்தையும், போஷாக்கினையும் மற்றும் சூழலையும் மேம்படுத்தல்

பாவனையாளர் பாதுகாப்புக்கும், சேமநலனுக்கும் பரந்த வீச்செல்லையிலான துறைகளில் அதன் நிபுணத்துடன் பெருமளவு தேசிய பிரச்சனைகளின் முக்கிய வகிபங்கொன்றை ஆற்றுவதை கை.தொ.நி. தொடர்ந்தது.

ஆராய்ச்சி, தொழில்நுட்ப அமைச்சின் வேண்டுகோளின் பேரில், இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவின் சில வணிகக் குறிகளின் அறிக்கையிடப்பட்ட DCD கலக்கப்பட்டமைக்கான சோதித்தலின் சவாலை கை.தொ.நி. பொறுப்பேற்றது. நீர் வழிவகைகளுக்கு பச்சை இல்ல வாயுக்களும், நைதரசனும் வழிந்தோடுவதைக் குறைப்பதற்காக பசுந்தரைகளுக்கு பிரயோகிக்கப்படும் இரசாயனமொன்றே DCD ஆகும். DCDஇன் சுகாதாரத் தாக்கங்கள் மீது அறிக்கையிடப்பட்ட இலக்கியம் இல்லாத போதிலும், DCDஇன் உயர்வான அளவுகள் மனித சுகாதாரத்திற்கு கெடுதலானவையாகும்.

பால் மாவில், DCDஇன் பகுப்பாய்வுக்காக உடனடியாக ஒரு சோதனை முறையை கை.தொ.நி. தாபித்ததுடன், முடிவுகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

ரத்துபஸ்வலவில், இறப்பர் பால் கையுறை தயாரிப்புத் தொழிற்சாலையின் கழிவு நீர் ஒழிப்பு பற்றி கிராமவாசிகளுக்கும், தொழிற்சாலைக்கும் இடையில் சர்ச்சையொன்று வெடித்தது. கம்பஹாவின் மாவட்டச் செயலாளரின் வேண்டுகோளின் பேரில், ரத்துபஸ்வலவில் கிணற்று நீரின் pH மட்டத்தை கை.தொ.நி. மதிப்பிட்டது. குறுகிய கால நேரமொன்றினுள் விரிவான ஆய்வொன்றை கை.தொ.நி. மேற்கொண்டதுடன், மாவட்டச் செயலாளருக்கு முடிவுகளையும் சமர்ப்பித்தது.

நாட்டில் இரைச்சல் அளவீட்டுக்கு ஒரேயொரு தத்துவமளிக்கப்பட்ட வசதியாக, கட்டுநாயக்க கடுகதிசாலையின் நெடுகிலும் குடியிருப்பாளர்களுக்கான இரைச்சல் தீழ்ப்பு மீது கருத்தொன்றை வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கை.தொ.நி. அழைக்கப்பட்டிருந்தது. IMMI இரைச்சல் மாதிரிப்படுத்தல் மென்கணியத்தைப் பயன்படுத்தி, நிருமாணிக்கப்படுவதற்கான இரைச்சல் தடைகளின் விஸ்தீரணத்தையிட்டு கை.தொ.நி. அறிக்கையிட்டிருந்தது. இரைச்சல் தடைகளை வடிவமைப்பதற்கு IMMI இரைச்சல் மாதிரிப்படுத்தல் மென்கணியம் பயன்படுத்தப்பட்டமை இதுவே முதல் தடவை என்பதுடன், இலங்கையில் இரைச்சல் தடைகள் நிருமாணிக்கப்படுவதும் இதுவே முதற் தடவையாகும்.

## கை.தொ.நி.இல் ஒரு துடிப்புடன் இயங்குகின்ற ஆராய்ச்சி, அபிவிருத்தி முறைமை

### மாலபே கருத்திட்டம்

**அதிகரிக்கப்பட்ட ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆற்றலளவு:** தமது சம்பந்தப்பட்ட துறைகளில் பட்டத்திற்குப் பிந்திய தகைமையைப் பெறுவதற்காக அதன் விஞ்ஞானிகளையும், எந்திரவியலாளர்களையும் ஊக்குவிப்பதை கை.தொ.நி. தொடர்ந்தது. ஆண்டின் போது, தமது பிஎச்.டி.ஐ 3 ஆராய்ச்சியாளர்கள் முடித்த அதே வேளை, தமது பிஎச்.டி கற்கைகளை வேறு 4 பேர் தொடர்ந்தனர். ஓர் ஆராய்ச்சியாளர் பிஎச்.டி.க்கு பதிவுசெய்துகொண்டார். தனது முதுமாணியை ஓர் ஆராய்ச்சியாளர் முடித்த அதேவேளை, மேலும் ஏழு பேர் முதுமாணி செயற்றிட்டத்திற்காக பதிவுசெய்துகொண்டனர். தமது முதுமாணி செயற்றிட்டங்களை வேறு 7 பேர் தொடர்ந்தனர்.

### வெளியீடுகள், ஆக்கவுரிமைகள், விருதுகள் மற்றும் பழுதுநீக்கல்கள்

இவ்வருடம் முதல் தடவையாக ஆராய்ச்சி கருத்தரங்கொன்றை கை.தொ.நி. நடத்தியது. எமது சொந்த ஆராய்ச்சி விஞ்ஞானிகளினாலும், எந்திரவியலாளர்களினாலும் வேறுபட்ட துறைகளிலிருந்து 39 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வருடம் சகபாடிகளினால் மதிப்புரைக்கப்பட்ட சஞ்சிகைகளில் மொத்தமாக 21 ஆராய்ச்சிக் கட்டுரைகள் என வெளியீடுகளின் எண்ணிக்கையில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருந்தது. ஆண்டின் போது, 2 உள்நாட்டு ஆக்கவுரிமைகளுக்கான விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

### மனித வளங்கள்

தகவல் சேவைகள் நிலைய சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி சுரனி சமரசேகர டிசம்பரில் சேவையிலிருந்து இளைப்பாறினார்.

ஆண்டின் போது, 32 ஆராய்ச்சி விஞ்ஞானிகள்/எந்திரவியலாளர்கள் ஆட்சேர்க்கப்பட்ட அதேவேளை, 11 பேர் நிறுவனத்திலிருந்து ராஜினாமா செய்தனர்/இளைப்பாறினர்.

### ஊழியர் உறவுகள் மற்றும் சேமநலன் நடவடிக்கைகள்:

நலன்புரி, பொழுதுபோக்கு கழகத்தினாலும், பௌத்த சங்கத்தினாலும் இணைந்து ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த பாரம்பரிய புத்தாண்டுக் கொண்டாட்டங்களுடன் ஆண்டு ஆரம்பித்தது. ஊழியர்களுக்காகவும், அவர்களது குடும்பத்தினருக்காகவும் நலன்புரி, பொழுதுபோக்குக் கழகத்தினால் அனுராதபுரத்திற்கும், திருகோணமலைக்குமான இரு நாள் சுற்றுலாவொன்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

புனிதத் தலமொன்றை பௌத்த சங்கம் கட்டியதுடன், இது அமைச்சர் கௌரவ பாட்டலி சம்பிக ரணவக்கவினால் திறந்துவைக்கப்பட்டது. வெசாக் மற்றும் போசன் ஆகியவற்றுக்கான வருடாந்தப் பிரார்த்தனைகளும், வெசாக் கூடு போட்டியும் 6ஆவது தொடர்ச்சியாக ஆண்டாக பௌத்த சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. கரோல் கீதம் இசைத்தல், மற்றும் கை.தொ.நி. பணியாளரின் பிள்ளைகளுக்கு அன்பளிப்புகளைப் பங்கிடுதல் ஆகியவற்றுடன் தமது பாரம்பரியமான நத்தார் கொண்டாட்டத்தை கிறிஸ்தவ சங்கம் தொடர்ந்தது. தகுதியான ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலைப் புத்தகங்களை வழங்குவதையும், சிங்கள, இந்து புத்தாண்டினதும், நத்தாரினதும் போது நிதியத்தைத் தோற்றுவிக்கும் விற்பனையையும் சேவா வனிதா அலகு தொடர்ந்தது.

**நிதிசார் செயற்றிறன்:** கடந்த வருடத்தின் வரவு-செலவுத்திட்டத்திலிருந்து மீளவரும் செலவினத்திற்கான அரசாங்க உதவுதொகை குறைவடைந்திருந்த அதேவேளை, மூலதன உதவுதொகை அதிகரித்தது. ரூ.169 மில்லியனிலிருந்து ரூ.176.6 மில்லியனுக்கு அதிகரிப்பொன்றை மீளவரும் உதவுதொகை காட்டிய அதேவேளை, மூலதன உதவுதொகை ரூ.97.2 மில்லியனிலிருந்து ரூ.146.7 மில்லியனுக்கு அதிகரித்தது.

நிறுவனத்தின் வருமானமானது 2012இல் ரூ.188.4 மில்லியனாக விளங்கி, 2013இல் 31%ஐக் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றுடன் ரூ.246.8 மில்லியனாக விளங்கிய அதேவேளை, மீளவரும் செலவினமானது ரூ.314.3 மில்லியனாக விளங்கி 21.2% அதிகரிப்பொன்றுடன் ரூ.380.8 மில்லியனாக விளங்கியது. வருமானம்/மீளவரும் செலவின விகிதமானது 60%இலிருந்து 65% என்ற மேல்நோக்கிய போக்கொன்றைக் காட்டியது. தோற்றுவிக்கப்பட்ட வருமானத்தின் 56.5%க்கு (ரூ.139.5 மில்லியன்) சோதித்தல் மற்றும் மதிப்பாராய்தல் சேவைகள் பங்களித்த அதேவேளை, ஒப்பந்தங்களிலிருந்தும், உசாவுகைச் சேவைகளிலிருந்தும் வருமானமானது 2012இல் ரூ.18.2 மில்லியனாக விளங்கி,

இவ்வருடத்தில் ரூ.25.3 மில்லியன் என அதிகரிப்பொன்றைக் காட்டியது. கடந்த வருடத்தின் ரூ. 2.8 மில்லியன் என்ற தொழில்நுட்பக் கைமாற்றத்திலிருந்து வருமானம் ரூ.4.0 மில்லியன் என 43% அதிகரிப்பொன்றைக் காட்டியது. ஊழியர் ஒருவருக்காகத் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூ.576,300இலிருந்து ரூ.963,800 என குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகரித்த அதேவேளை, ஊழியர் ஒருவருக்கான செலவினம் ரூ.961,162இலிருந்து ரூ.624,892க்கு குறைவடைந்தது. ஆண்டுக்காக குறித்துரைக்கப்பட்ட முழுமையான வருமான இலக்கினை நிறுவனம் சாதித்ததினால், 10ஆவது தொடர்ச்சியான ஆண்டாக பணியாளருக்கு செயற்றிறன் அடிப்படையிலான ஊக்குவிப்புகள் கொடுப்பனவு செய்யப்பட்டன.

சோதித்தல் மற்றும் மதிப்பாராய்தல் சேவைகளிலிருந்து நிறுவனத்தின் தோற்றுவிக்கப்பட்ட வருமானத்தின் உயர்வான சதவீதமாக விளங்கிய அதேவேளை, தொழில்நுட்பக் கைமாற்றம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிலிருந்து வருமானம் தொடர்ந்தும் சுமார் 5%ஆக இருந்தது. இது கைத்தொழிலிருந்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சேவைகளுக்காக நிலவுகின்ற குறைந்த கிராக்கியைப் பிரதிபலிக்கின்றது. தனியார் துறையினால் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணி மேற்கொள்ளப்படுவதை மேம்படுத்துவதற்காக மும்மடங்கான வரிக் குறைப்பு அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்குமான கிராக்கியை அதிகரிப்பதில் குறிப்பிடத்தக்க தாக்கமொன்றை அது இன்னுமே கொண்டிருக்கவில்லை. 2016க்குள் பிராந்திய அறிவுக் கேந்திர மையமொன்றாக வருவதற்கு இலங்கை அடைய விரும்புவதால் கை.தொ.நி. போன்ற நிறுவனங்கள் இத்துறையில் முக்கிய வகிபங்கொன்றை ஆற்றுவதற்கு கடுமையான முயற்சிகளை எடுப்பது தட்டிக்கழிக்க முடியாததாகும்.

**வருமானம் - வியாபரச் செயற்பாடுகள் (ரூ. மில்.)**




**வியாபாரச் செயற்பாடுகள் மீதான வருமானம் - போக்கு (ரூ. மில்.)**



## மீளவரும் செலவீனம் (ரூ. மில்.)




## மீளவரும் செலவீனம் - போக்கு (ரூபா)




## தொழிற்பாட்டு வருமானம் (ரூ. மில்.)




## மொத்த வருமானம் எதிர் மீளவரும் செலவீனம்




## ஊழியர் ஒருவருக்கான செலவீனம்




## ஊழியர் ஒருவருக்காகத் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்



## அத்தியாயம் 1 - செயற்றிறன் சிறப்பம்சங்கள்

### கட்டுநாயக்க கடுகதி சாலை மீதான இரைச்சல் தடைகள்

பெருமளவு பட்டினங்கள், வதிவிடப் பகுதிகள் மற்றும் சதுப்பு நிலங்கள் ஆகியவற்றின் ஊடாக, கட்டுநாயக்க கடுகதிசாலை ஓடுவதுடன், இது இரைச்சல் தீழ்ப்புக்கு கூருணர்விலானதாகும். கட்டுநாயக்க கடுகதிசாலையை நிருமாணித்த வேளை, இரைச்சல் தீழ்ப்பின் மறுதலையிலான தாக்கத்தைத் தடுப்பதற்காக நிருமாணிக்கப்படவுள்ள இரைச்சல் தடைகளின் மொத்த நீளம் மீது RDAக்கும், நிருமாண நிறுவனத்திற்கும் இடையில் வேற்றுமை எழுந்தது. உசாவலர் ஒருவராக, பாகுபாடற்ற தீர்மானமொன்றை கை.தொ.நி. வழங்கியதுடன், IMMI இரைச்சல் மாதிரிப்படுத்தல் மென்கணியத்தைப் பயன்படுத்தி இரைச்சல் தடைகள் மீது பரிந்துரைகளையும் சமர்ப்பித்தது.

இலங்கைக்கு நெடுஞ்சாலைகளுக்கான இரைச்சல் கொள்கையொன்று கிட்டாததினால், நெடுஞ்சாலை இரைச்சல் கட்டுப்பாடு மீது வேறு நாடுகளினால் விருத்திசெய்யப்பட்டுள்ள ஆய்வுகளினதும், நியதிகளினதும் மீது கை.தொ.நி. நிபுணர்கள் தங்கியிருக்க வேண்டியிருந்தது. நெடுஞ்சாலை மீது RDAஇனால் வழங்கப்பட்ட போக்குவரத்து ஓட்டம் மீதான எதிர்வுகூறலைப் பயன்படுத்தி, தெற்கு கடுகதிசாலை மீதான இரைச்சல் கண்காணித்தல் தரவைப் பயன்படுத்தி வாகன இரைச்சல் எதிர்வுகூறப்பட்டு, செல்லுபடியாக்கப்பட்டது. கை.தொ.நி. பரிந்துரைகள் மீது நிருமாணிக்கப்பட்ட இரைச்சல் தடைகள் தற்போது செயற்பாட்டில் உள்ளன.

இந்த உசாவுகைக் கருத்திட்டமானது கை.தொ.நி.க்கும் இலங்கையில் உள்ள நெடுஞ்சாலை மரபுவழிக்கதையில் பலவழிகளிலும் ஒரு மைல்கல்லாகும்; இரைச்சல் தடைகளை வடிவமைப்பதற்கு IMMI இரைச்சல் மாதிரிப்படுத்தல் மென்கணியம் பயன்படுத்தப்பட்டது இதுவே முதலாவது தடவையாகும் என்பதுடன், இலங்கையில் நெடுஞ்சாலைகள் மீது இரைச்சல் தடைகள் எழுப்பப்பட்டமையும் இதுவே முதல் தடவையாகும்.

### NBROக்கு தன்னியக்கத்திலான மழை மானிகளின் விநியோகம் மற்றும் நிறுவுகை

ஒரு குறுகிய கால நேரத்தினுள் கடுமையான மழைவீழ்ச்சியே நிலச்சரிவுகளுக்கு ஒரு முக்கிய காரணமாகும். இவ்வாறாக, விசேடமாக நிலச்சரிவுக்கு உயர்ந்தளவில் ஊறுபடத்தக்க பகுதிகளில் மழைவீழ்ச்சியைக் கண்காணிப்பது அழிவுகளைத் தவிர்ப்பதில் முக்கியமானதாகும். வெளியேற்றம் போன்ற அவசியமான தீர்மானங்களை எடுப்பதற்கு குறுகிய கால நேரங்களுக்கு இழுபடுகின்ற மழைவீழ்ச்சிப் புள்ளிவிபரங்கள் மதிப்பாயப்பட வேண்டும். நிலச்சரிவைக் கண்காணிப்பதற்கும், தணிப்பதற்கும், முகாமை செய்வதற்கும் இலங்கையில் உள்ள குறித்துரைக்கப்பட்டுள்ள உறுப்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சித் தாபனம் (NBRO) விளங்குகின்றது.

கை.தொ.நி.இன் தன்னியக்கத்திலான மழை மானி விருத்தி செய்யப்படுவதற்கு முன் நாட்டில் குறுகிய கால நேரத்துக்கு இழுபடுகின்ற மழைவீழ்ச்சியைக் கண்காணிப்பதற்கான முறையொன்று கிட்டவில்லை. அடைதலினால் கட்டுப்படுத்தப்படும் இணையதள பிரயோகம் ஒன்றின் ஊடாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர்களினால் 'ஒன்லைன்' மூலம் பரிமாறிக்கொள்வதற்கான தரவினை இந்த உபகரணம் வழங்குகின்றது.

குறுகிய நேர மழைவீழ்ச்சியைக் கண்காணிப்பதற்கும், உடனடியாக நிகழக்கூடிய நிலச்சரிவுகளை எதிர்வுகூறுவதற்குமான மிகவும் பொருத்தமான உபகரணமாக கை.தொ.நி.இன் தன்னியக்கத்திலான மழை மானியை NBRO அடையாளம் கண்டதுடன், கண்டி, மாத்தளை, கேகாலை, குருநாகல், நுவரெலியா மற்றும் பதுளை ஆகியவற்றில் 35 மழை மானிகளின் நிறுவுகைக்கு வேண்டுகோள் விடுத்தது, மேலும், அடுத்த மூன்று வருடங்களுக்கு இந்த தன்னியக்கத்திலான மழை மானிகளின் தொழிற்பாடும், பராமரிப்பும் கை.தொ.நி.க்கு வழங்கப்பட்டுள்ளன.

## அழற்சி எதிர்ப்பினையும், கொழுப்பினையும் குறைக்கும் செயற்பாடுகளுக்கு இலங்கையின் பாரம்பரிய அரிசி இனங்களின் மதிப்பாய்வு

பாரம்பரிய மற்றும் நாட்டு மருத்துவத்தின் பிரகாரம் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் துணிக்கைகளை இலங்கையின் பாரம்பரிய அரிசி இனங்கள் கொண்டுள்ளதாகப் பாராட்டப்பட்டுள்ளது. சில இனங்கள் அழற்சி எதிர்ப்பினையும், கொழுப்பினையும் குறைக்கும் துணிக்கைகள் உள்ளதாக நம்பப்படுகின்றது. எனினும், இதை நிரூபிப்பதற்கு விஞ்ஞானரீதியில் ஆவணப்படுத்தப்பட்ட தரவு கிட்டவில்லை. சுது ஹீனற்றி, கொட ஹீனற்றி, மசூரன் மற்றும் டிக் வீ என்ற பெயரிலான நான்கு பாரம்பரியமான அரிசி இனங்கள் மீது ஆராய்ச்சியொன்றைக் கை.தொ.நி. நடத்தியது. பல்-எண்ணிக்கை பொறிமுறைகள் ஊடாக உயர்வான அழற்சி எதிர்ப்பு செயற்பாட்டினையும், மிதமான கொழுப்பினைக் குறைக்கும் செயற்பாட்டினையும் சகல இனங்களும் காட்டின. மேலும், அழற்சி எதிர்ப்பினையும், கொழுப்பினையும் குறைக்கும் செயற்பாடுகளை மதிப்பிடுவதற்கான எடைப்பண்பு மதிப்பீடு தாபிக்கப்பட்டதுடன், இவை சோதித்தல் மற்றும் ஆராய்ச்சி, அபிவிருத்தி சேவைகளை வழங்குவதில் நன்மையானவையாகும். இறுதியாக, மோசமான நிலைக்குத் தள்ளும் நோய்களின் நிகழ்வினைக் குறைப்பதற்கான வழியை ஆய்வு முடிவுகள் வகுக்கும்.

## கோதுமை/அரிசி ஒன்றிணைக்கப்பட்ட வெதுப்பக உற்பத்திப்பொருட்களில் அரிசி சதவீதத்தின் மதிப்பீட்டுக்கான மூலக்கூற்று முறையொன்றை விருத்திசெய்தல்

ஆரோக்கியத்தினதும், போஷாக்கினதும் மீதான வளர்ச்சியுறும் விழிப்புடன், தாம் சாப்பிடும் உணவையிட்டு மக்கள் அதிகளவு உணர்வுப்பூர்வமாக உள்ளனர். இவ்வாறாக, அரிசி மாவு ஒன்றிணைக்கப்பட்ட பாண் பிரசித்தத்தை ஈட்டியுள்ளது. எனினும், பாணின் இழையமைப்பு தரத்தை அரிசி மாவு ஒன்றிணைப்பானது குறைப்பதுடன், பாணில் அரிசி மாவின் சதவீதத்தை மாற்றுவதற்கு சில வெதுப்பக உரிமையாளர்கள் முனைகின்றார்கள்.

DNA மற்றும் அனலிஸ்த் அடக்கங்களைப் பிரித்தெடுப்பதற்கு பொலிமேர்ஸ் சங்கிலி மீள் தாக்க (PCR) தொழில்நுட்ப முறை பயன்படுத்தப்படுகின்றது. சோடியம் டோடிசில் சல்பேற் பொலி-அக்ரிலாமைட் ஜெல் இலக்ட்ரோபொரசில் அல்லது SDS-PAGE ஆகியவற்றைப் பயன்படுத்தி புரதங்கள் வேறுபடுத்தப்பட்டன. இதில், அரிசி மாவுக்கு மாறுபாடான குறிப்பான புரதமொன்று அடையாளங்காணப்பட்டு, தொகைப்படுத்தப்பட முடியும்.

# தேசிய பிரச்சனைகளுக்கு கை.தொ.நி.இன் பங்களிப்பு

## இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவில் DCD

2013 ஆரம்பத்தில், சில வணிகக்குறிகளைக் கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவு DCDஉடன் மாசடைந்திருப்பதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அறிக்கைகளின் பிரகாரம், பச்சை இல்ல வாயுக்களையும், நீர் நிலைகளுக்கு வழிந்தோடும் நைதரசனையும் குறைக்கும் குறிக்கோளுடன் பசுந்தீவனத்திற்கு பிரயோகிக்கப்பட்ட இரசாயனமொன்று பாலில் பிரவேசித்துள்ளது. மனித ஆரோக்கியம் மீது DCDஇன் தாக்கத்தின் சான்று இல்லாத போதிலும், பாலில் அந்நியப் பதார்த்தம் இருப்பது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சின் வேண்டுகோளின் பேரில், DCDஇன் பகுப்பாய்வுக்காக சோதனை முறையொன்றை கை.தொ.நி. விருத்திசெய்து, தாபித்ததுடன், இறக்குமதி செய்யப்படும் பால் வகைகளின் DCD சோதித்தலை தொடர்ச்சியாக மேற்கொள்கின்றது. ஓகஸ்ட் முதல் டிசம்பர் வரை, 900க்கு மேற்பட்ட பால் மாதிரிகள் சோதிக்கப்பட்டதுடன், அரசாங்கத்தின் பணிப்புரையின் கீழ் தொடருகின்றது.

## ரத்துபஸ்வல பகுதியில் கிணற்று நீர் தர ஆய்வு

ரத்துபஸ்வல பகுதியில் கிணற்று நீரின் pH குறைப்பினை மதிப்பிடுவதற்கும், pH குறைப்புக்கும், மண்ணில் இறப்பர்பால் கையுறை தயாரிப்பு தொழிற்சாலையொன்றினால் தோற்றுவிக்கப்படும் கழிவின் பிரசன்னத்திற்கும் இடையில் ஏதாவது சாத்தியமான உறவு

உள்ளதா என்பதை அடையாளம் காண்பதற்கும் கம்பஹா மாவட்டச் செயலாளரின் வேண்டுகோள் மீது கை.தொ.நி.இனால் ஆய்வொன்று நடத்தப்பட்டது. பிரச்சனையைக் களைவதில் அரசாங்கத்திற்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்கி விரிவான பகுப்பாய்வொன்றை கை.தொ.நி.இன் இரசாயன, நுண்ணுயிரியல் ஆய்வுகூடம் மேற்கொண்டது.

### அங்கீகரிக்கப்படும் "வல்ல" பட்டை

உயர் தரத்திலான வாசனைத்திரவியங்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் சுதேசிய தாவரமொன்றாக "வல்ல" பட்டை அல்லது இலங்கை ஒகார் மரம் விளங்குவதுடன், இது உலகச் சந்தைகளில் உயர்ந்த கிராக்கியைக் கொண்டுள்ளது. இது சுதேசிய தாவரமொன்று என்பதால், மரத்தை வர்த்தகம் செய்வதற்கும், ஏற்றிஇறக்குவதற்கும் சட்டபூர்வ தடைகள் உள்ளன. "வல்ல" பட்டையைக் கடத்துவதற்கான முயற்சிகள் அதிகரித்ததினால், சட்டபூர்வ நடவடிக்கைகளை வினைப்படுத்துவதற்காக பறிமுதல் செய்யப்பட்ட மரத்தையும், குங்கிலியத்தையும் ஊர்ஜிதப்படுத்துவது அவசியமானதாகும். GC-MS கைரேகை அச்சினைப் பயன்படுத்தி "வல்ல" பட்டையையும், அதன் குங்கிலியத்தையும் அடையாளங் காண்பதற்கான முறையொன்றை கை.தொ.நி.இன் மூலிகைத் தொழில்நுட்ப விஞ்ஞானிகள் தாபித்தனர். மாதிரியை ஊர்ஜிதப்படுத்துவதற்காக மரத்திலிருந்து அத்துடன்/அல்லது குங்கிலியத்திலிருந்து ஆவியாக்கிகள் பகுப்பாயப்பட்டன. தற்போது இலங்கையில் ஒழுங்குபடுத்தல்/சட்டபூர்வ அதிகாரசபைகளினால் இந் நடைமுறை மேற்கொள்ளப்படுகின்றது.

## தொழில்நுட்பக் கைமாற்றல்கள்

### தன்னியக்கத்திலான மழை மானி

குறுகிய கால நேரமொன்றினுள் கடுமையான மழைவீழ்ச்சியொன்றின் பின்னர் நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன. அழிவு முகாமைத்துவத்தின் போது, தீர்மானமெடுப்பதில் உண்மையான நேர மழைவீழ்ச்சி தொகைகள் முக்கியமானவையாகும். கை.தொ.நி.இனால் விருத்தி செய்யப்பட்ட தன்னியக்கத்திலான மழை மானியானது உயர்ந்த வேகத்திலானதும், செம்மையானதுமான டிஜிட்டல் தொலைதொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மழைவீழ்ச்சித் தொகைகளை கைமாற்றுகின்றது.

ஆரம்பத்தில், 2007ஆம் ஆண்டில் தன்னியக்கத்திலான மழை மானி விருத்தி செய்யப்பட்டது. அது முதல் தொடர்ச்சியான மேம்படுத்தல்களுடனும், வெளிக்கள சோதனைகளுடனும் உபகரணத்தின் நம்பகதன்மையும், செம்மைத்தன்மையும் தரமுயர்த்தப்பட்டன. 2013இல் ஆக்கவுரிமை அடிப்படையின் மீது பூரணப்படுத்தப்பட்ட தன்னியக்கத்திலான மழை மானியின் புனைவுத் தொழில்நுட்பம் CIVICON என்ஜினியரிங் பிறை. லிமிற்றெற்றுக்கு கைமாற்றப்பட்டது. அதன் உயர்வான செயற்றிறனை உறுதிப்படுத்தி மழை மானிகளின் தரக் கட்டுப்பாட்டினையும், மதிப்பாராய்தலையும் கை.தொ.நி. தொடருகின்றது.

### மரக்கறி மற்றும் பழ பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு *Bt*

டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதில் கருவியொன்றாக மக்கள் மத்தியில் *Bacillus thuriengensis* அல்லது *Bt* என பொதுவாக அறியப்பட்டது பிரசித்தமாக விளங்குகின்றது. பழங்களினதும், மரக்கறிகளினதும் கோலியோப்பீரன் பூச்சிகளின் கட்டுப்பாட்டில் *Bt* உள்நாட்டு இனத்தைப் பயன்படுத்தும் சாத்தியத்தை வெளிப்படுத்துவதற்கு *Bt* (*Bacillus thuriengensis* sub species *kurstaki* or *Btk*) என்ற உள்நாட்டு இனமொன்று சோதிக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிக் கருத்திட்டமானது பயோ பவர் லங்கா (பிறை.) லிமிற்றெற்றினால் நிதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து விருத்திசெய்யப்பட்ட தொழில்நுட்பமும், Btஇன் தாய் வளர்ப்பும் வர்த்தகப் பயன்பாட்டுக்காக அதே நிறுவனத்திற்கு கைமாற்றப்பட்டுள்ளது.

## கை.தொ.நி. தொழில்நுட்பங்களின் மேலதிக கைமாற்றல்கள்

உள்நாட்டு அரிசி இனங்களிலிருந்து திடீர் அரிசி அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள்

கறிவேப்பிலைக் குடிபானம்

மேம்படுத்தப்பட்ட கற்றாளைக் குடிபானம்

தூய தேங்காயெண்ணையைப் பிரித்தெடுப்பதற்கான புதுமையான செய்முறை

அவகாடோ எண்ணெய்ப் பிரித்தெடுப்பு

சோளப் பாணி உற்பத்தி

ஸ்பா தர மூலிகை எண்ணெய்களை கலக்குவதற்கான தொழில்நுட்பம்

சவரத்திற்கும் பிந்திய மூலிகைத் திரவத்தை விருத்திசெய்தல்

நுளம்பு விரட்டிக்காக பாரம்பரிய மூலசூத்திரம் அடிப்படையிலான திரவ ஆவியாக்கி

## கைமாற்றுவதற்கு தயார்நிலையிலான தொழில்நுட்பங்கள்

### *Moringa oleifera* தேயிலை மற்றும் மூப்படைதல் எதிர்ப்புக் களிம்பு

*Moringa oleifera*இலிருந்து மூலிகைத் தேயிலையும், மூப்படைதல் எதிர்ப்புக் களிம்பினையும் மூலிகைத் தொழில்நுட்பப் பிரிவு விருத்திசெய்துள்ளது. *M. olifera* இலையானது லிப்பேசு எதிர்ப்பு, கொலஸ்ட்ரோல் எதிர்ப்பு மற்றும் கிளைகோஜன் எதிர்ப்புச் செயற்பாட்டினைக் காட்டுகின்றது. தேயிலை மற்றும் களிம்பு ஆகிய இரண்டும் மேற்படி செயற்பாடுகளைக் கொண்டுள்ளதுடன், இவை மூப்படைதல் எதிர்ப்பு தாக்கத்திற்கு இட்டுச்செல்கின்றன. *Moringa* தேயிலையினதும், மூப்படைதல் எதிர்ப்பு களிம்பினதும் தயாரிப்புக்கான தொழில்நுட்பம் கைமாற்றப்படுவதற்கு தயாராகவுள்ளது.

### மூலிகை வளிப் புத்துணர்ச்சியூட்டிகள்

இனிப்பான நறுமணமொன்றைச் சேர்ப்பதன் மூலம் உள்ளக சூழலை ரம்மியமாக்குவது குடித்தனங்களிலும், அலுவலகங்களில் வளிப் புத்துணர்ச்சியூட்டிகள் ''கட்டாயமான'' ஒன்றாக விளங்குகின்றன. தற்போது சந்தையில் உள்ள பலதரப்பட்ட வணிகக்குறிகளையும், வகைகளையும் கொண்ட வளி புத்துணர்ச்சியூட்டிகள் மக்களுக்கு கெடுதலான கரைமங்களைக் கொண்டுள்ளன. பச்சோலி, கறுவாப்பட்டை எண்ணெய் மற்றும் வல்ல பட்டை பிரித்தெடுப்புகள் ஆகியனவற்றைக் கொண்டுள்ள 'மூலிகை வளிப் புத்துணர்ச்சியூட்டி' ஒன்றை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பமொன்றைக் கை.தொ.நி. விருத்தி செய்துள்ளது.

### இயற்கையான கறிவேப்பிலை நறுமணப் பிரித்தெடுப்பு முறை

சலாதுக்கு சேர்த்துக் கொள்வதற்கும், பெருமளவு வேறு சமைத்தல் நோக்கங்களுக்கும் பயன்படுத்தக்கூடிய உண்ணத்தக்க எண்ணெய் ஒன்றுடன் சேர்த்துக்கொள்ளக்கூடிய இயற்கையான கறிவேப்பிலை நறுமணத்தைப் பிரித்தெடுப்பதற்கு முறையொன்று விருத்திசெய்யப்பட்டுள்ளது. உயர்வான வெப்பநிலையை முறை பயன்படுத்துவதில்லை என்பதனால் இயற்கையான நறுமணம் தக்கவைக்கப்படுகின்றது.

## இயற்கையான காரீயத்தின் தூய்மையாக்கல் முறை

தூய்மையாக்கப்பட்ட காரீயம் மிகவும் செலவினமானது என்ற போதிலும், இலங்கை மிகவும் குறைந்த விலையொன்றில் இயற்கையான காரீயத்தை ஏற்றுமதிசெய்கின்றது. இதுவரை, நாடொன்றாக காரீயத்தை தூய்மையாக்குவதற்கு நாம் முறையொன்றைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், தற்போது 99.9% தூய்மையான காரீயத்தை வழங்கும் செயற்றிறனானதும், செயல்விளைவிலானதுமான தூய்மையாக்கல் முறையொன்றை கை.தொ.நி. விருத்திசெய்துள்ளது.

இது உள்நாட்டுக் காரீயத்திற்கு பெறுமதியைச் சேர்ப்பதுடன், நாட்டுக்கு கணிசமான தொகையிலான வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டுவர முடியும்.

## உற்பத்தியின் ஆரம்பம்

2013இல், இளநீரையும் மற்றும் ஒமேகா-3 முட்டைகளையும் போத்தலில் அடைத்தல் என்ற இரு உற்பத்திப்பொருட்கள் கை.தொ.நி.இனால் விருத்திசெய்யப்பட்ட தொழில்நுட்பங்கள் மீதான அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டன.

**போத்தலில் அடைக்கப்பட்ட இளநீர்** - இளநீரைப் போத்தலில் அடைக்கும் செய்முறையின் தொழில்நுட்பங்களை விருத்திசெய்வதற்காகவும், தொழிற்சாலையை வடிவமைப்பதற்காகவும், அமைப்பதற்காகவும் கொழும்பு 06இல் உள்ள ட்ரொபிக் புருட் (பிறை.) லிமிற்றெற்றின் வேண்டுகோளின் பேரில் கை.தொ.நி. விஞ்ஞானிகளினால் செய்யப்பட்டது. இந்த உற்பத்திப்பொருள் ஏற்றுமதிச் சந்தையை இலக்குப்படுத்தியது.

## அத்தியாயம் 2 - உட்கட்டமைப்பு தரம்

நாட்டின் முன்னணிவாய்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமாக, கைத்தொழிலுக்கான தரத்திலான தொழில்நுட்ப சேவைகளின் ஏற்பாட்டுக்கு கை.தொ.நி. முழுமையான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளது.

2004 செப்ரெம்பர் முதல் சகல அதன் உற்பத்திப்பொருள்களிலும் நிறுவனத்தின் உயர்ந்த தரங்கள் உறுதியாகக் கடைப்பிடிப்பதை உறுதியளிப்பதற்கு கை.தொ.நி.இன் தர உறுதிப்படுத்தல் திணைக்களம் பொறுப்பினைக் கொண்டிருந்தது. இணங்குதல் மதிப்பீட்டுக்காக சுவீடிஷ் தத்துவமளிப்புச் சபை (SWEDAC) மற்றும் இலங்கைத் தத்துவமளிப்புச் சபை (SLAB) ஆகியவற்றுடன் தொடர்பினை அலகு பராமரிக்கின்றது.

2004 ஆண்டு முதல், ISO 17025:2005 தர முகாமைத்துவ முறைமை தராதரத்திற்கு எதிராக SWEDACஇனால் (சுவீடிஷ் தத்துவமளிப்பு, இணங்குதல் மதிப்பீட்டுச் சபை) இரசாயன, நுண்ணுயிரியல், எடையளவியல் மற்றும் பொருட்கள் ஆகிய கை.தொ.நி.இன் நான்கு ஆய்வுகூடங்கள் தற்போது தத்துவமளிக்கப்படுகின்றன. 2006 முதல், இலங்கைத் தத்துவமளிப்புச் சபையினால் (SLAB) இரசாயன, நுண்ணுயிரியல், பொருள் மற்றும் மின்னியல் தொழில்நுட்ப சோதித்தல் ஆய்வுகூடங்களும் தத்துவமளிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தித் தாபனத்தினால் (UNIDO) சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிராந்திய பயிற்சி நிறுவனமொன்றாக கை.தொ.நி. அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், UNIDOஇன் உதவியுடன் ஆண்டின் போது பாகிஸ்தானிலிருந்து ஏழு விஞ்ஞானிகளுக்கு அது பயிற்சியையும் வழங்கியுள்ளது.

ஆய்வுகூடத் திட்டமிடலுக்கும், ISO 17025, 15189, 22000, 9001 மற்றும் GLP ஆகியன தாபிக்கப்படுவதற்குமான உசாவுகையை தர உறுதிப்படுத்தல் திணைக்களம் வழங்குகின்றது. தொடர்ச்சியான தொழில்நுட்பத் தணிக்கைகளை அலகு நடத்துவதுடன், கை.தொ.நி.இனுள் வேறு அமைப்புக்களைக் கொண்ட தேர்ச்சித்திறன் சோதித்தலிலும் ஈடுபடுகின்றது. கிட்டிய அண்மைக் காலத்தில் உள்நாட்டு அத்துடன் கடல்கடந்த விஞ்ஞான நிறுவனங்களுக்காக உறுதியற்றதன்மை, முறை செல்லுபடியாக்கல் மற்றும் தர முகாமைத்துவப் பயிற்சி ஆகியன மீது வாடிக்கையாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட பயிற்சிச் செயற்றிட்டங்களை தர உறுதிப்படுத்தல் திணைக்களம் ஒழுங்குபடுத்தியுள்ளது.

### ISO 17025 தர முறைமைக்காக SLAB மற்றும் SWEDAC தத்துவமளிப்பு

நாட்டின் முன்னணிவாய்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமாக, கைத்தொழிலுக்கான தரத்திலான தொழில்நுட்பச் சேவைகளின் ஏற்பாட்டுக்கு கை.தொ.நி. முழுமையான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளது.

### இரசாயன, நுண்ணுயிரியல் ஆய்வுகூடத்தின் தத்துவமளிப்பு நிலை

2002 முதல் சுவீடிஷ் தத்துவமளிப்பு, இணங்குதல் மதிப்பீட்டுச் சபையிலிருந்து (SWEDAC) ISO/IEC 17025: 2005 மீது சோதித்தலுக்கு அதன் தத்துவமளிப்பு நிலையைப் பராமரிப்பதை இரசாயன, நுண்ணுயிரியல் ஆய்வுகூடம் தொடர்ந்தது. கடந்த 6 வருடங்களுக்கு எமது தத்துவமளிப்பு விரிவெல்லையை மேலும் நீடிப்பதற்கான வாய்ப்பொன்றை இணங்குதல் மதிப்பீட்டுக்கான இலக்கைத் தத்துவமளிப்புச் சபையின் தாபிப்பு வாய்ப்பொன்றை வழங்கியது. நூற்றுக்கு மேற்பட்ட சாராமாறிகளை தேசிய மற்றும் சர்வதேச தத்துவமளிப்பு விரிவெல்லை உள்ளடக்குகின்றது.

### கைத்தொழில் எடையளவியல் ஆய்வுகூடத்தின் தத்துவமளிப்பு நிலை

தத்துவமளிப்பினைப் பெறுவதற்காக இலங்கையில் முதலாவது மதிப்பாராய்தல் ஆய்வுகூடமே கை.தொ.நி. எடையளவியல் ஆய்வுகூடம் என்பதுடன், இது பௌதீக

அளவீடுகளின் SI அலகுகளுக்கு சுவடுகாணலை வழங்குகின்றது. கை.தொ.நி.இன் கைத்தொழில் எடையளவியல் ஆய்வுகூடமானது தற்போது வெப்பநிலை, திணிவு, பரிமாணம், கனவளவு மற்றும் மின்சார மதிப்பாராய்தல்கள் ஆகியவற்றுக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது.

**பொருள் ஆய்வுகூடத்தின் தத்துவமளிப்பு நிலை**

இறப்பர், மட்பாண்டங்களின் சோதித்தலுக்கு கை.தொ.நி.இன் பொருட்கள் ஆய்வுகூடம் தற்போது தத்துவமளிக்கப்பட்டுள்ளது.

**மின்னியல் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தின் தத்துவமளிப்பு நிலை**

இரைச்சல் மற்றும் அதிர்வு அளவீடுகளின் துறைகளில் தத்துவமளிப்பினை பெறுவதற்கான இலங்கையில் உள்ள முதலாவது ஆய்வுகூடமே கை.தொ.நி. மின்னியல் தொழில்நுட்ப ஆய்வுகூடமாகும்.

**கை.தொ.நி. ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆய்வுகூடங்களுக்கும், ISCக்கும் ISO 9001:2008 சான்றுப்பத்திரம்**

நாட்டின் முதன்மையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமாக கைத்தொழிலுக்கான தரத்திலான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் சேவைகளினதும், தகவல் சேவைகளினதும் ஏற்பாட்டுக்கு கை.தொ.நி. முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. பணியை நிறைவேற்றுவதில், அதன் ISO 9001:2008 சான்றளிப்பு நிலையை கை.தொ.நி. பராமரிப்பதுடன், தற்போது உணவுத் தொழில்நுட்ப, மூலிகைத் தொழில்நுட்ப, சூழல் தொழில்நுட்ப, பொருள் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் மற்றும் தகவல் சேவைகள் நிலையம் ஆகியன ISO 9001:2008 முறைமைக்கு சான்றளிக்கப்பட்டவையாகும். சான்றளிப்பு நிலை 6ஆவது தொடர்ச்சியான ஆண்டாகப் பராமரிக்கப்பட்டது.

**ஆவணப்படுத்தல் மற்றும் பயிற்சி**

முறைமையின் தொடர்ச்சியான மேம்படுத்தலொன்றாகவும், புதிய தரம் பிரதிநிதிகளை நியமிப்பதன் மூலம் விளையக்கூடிய பின்னடைவுகளைத் தடுப்பதற்கும் பிரிவுகளின் தரப் பிரதிநிதிகளுக்கு ISO 9001: 2008 முறைமை அமுலாக்கம் மீதான பயிற்சிச் செயற்றிட்டம் நடத்தப்பட்டது. இப் பயிற்சியின் போது, உள்ளகக் கணக்காய்வாளர்களினால் எழுப்பப்பட்ட இணக்கமின்மைகளை மூடுவதற்கு அவசியப்படும் சம்பந்தப்பட்ட தர விடயங்கள் மீது தரப் பிரதிநிதிகள் அறியச்செய்யப்பட்டனர்.

**உள்ளகத் தணிக்கை**

தர முகாமைத்துவ முறைமையின் தேவைப்பாடொன்றாக 2013க்காக தர உறுதிப்படுத்தல் திணைக்களத்தினால் ஆறு உள்ளக தணிக்கைகள் நடத்தப்பட்டன. தர முகாமைத்துவ முறைமை, முகாமைத்துவப் பொறுப்பு, வள முகாமைத்துவம், சேவையை நிறைவேற்றுதல், அளவீட்டுப் பகுப்பாய்வு மற்றும் மேம்படுத்தல் மற்றும் நிலைக்குத்து தணிக்கை ஆகிய துறைகளை தணிக்கைகள் உள்ளடக்கியிருந்தன. பிரிவுசார் பணியாட் உறுப்பினர்களினாலும், உள்ளகத் தணிக்கையாளர்களினாலும் எழுப்பப்பட்ட இணக்கமின்மைகள் வெற்றிகரமாக சீராக்கப்பட்டன. உள்ளகத் தணிக்கைகளின் போது தலைமைத் தணிக்கையாளர்கள், தணிக்கையாளர்கள் மற்றும் அவதானிகள் என்ற ஆற்றலளவில் நிறுவனரீதியிலான QMSஇன் (ISO 9001-2008 மற்றும் ISO 17025: 2005) அமுலாக்கத்திற்கு பெருமளவு பிரிவுசார் உறுப்பினர்கள் பங்களித்தனர்.

## அத்தியாயம் 3 - கைத்தொழில் தொழில்நுட்ப அபிவிருத்தியைத் துரிதப்படுத்தல்

சந்தையில் போட்டிக்குரியதாக இருப்பதற்கும், உற்பத்திப்பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும் கைத்தொழிலுக்கு ஆதரவளிப்பதற்காக உற்பத்திப்பொருட்களின் ஆராய்ச்சியையும், அபிவிருத்தியையும் கை.தொ.நி. தொடர்ச்சியாக நடத்துகின்றது. உசாவுகைகள், ஒப்பந்தம் மற்றும் கிராக்கி செலுத்தலிலான ஆராய்ச்சிச் செயற்பாடுகள் ஆகியவற்றில் ஈடுபடும் கை.தொ.நி. விஞ்ஞானிகள் உள்ள பாரிய துறைகளாக உணவு, மூலிகை, பொருட்கள், இரசாயனங்கள் ஆகியன விளங்குகின்றன. ஆண்டின் போது நடந்த முக்கிய செயற்பாடுகளின் சில மீது பின்வரும் பகுதிகள் விரிவாகக் குறிப்பிடுகின்றன.

### பழங்கள் மற்றும் மரக்கறிச் சாறுகளுக்கு பெறுமதி சேர்ப்பதற்காக மென்சவ்வு வடிகட்டல் மற்றும் செய்முறை மாதிரிப்படுத்தல்

சந்தையில் கிட்டுகின்ற உண்ணத்தக்க சாறுகள் மந்தாரமான தோற்றத்தைக் கொண்டிருப்பதுடன், இது அவற்றின் சந்தைப்படுத்தல் தன்மையைக் குறைக்கின்றது. அன்னாசி, பப்பாசி மற்றும் பீட்ரூட் ஆகியவற்றிலிருந்து மென்சவ்வு வடிகட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தெளிவான சாறின் தயாரிப்பு மிகவும் வெற்றியடைந்துள்ளதுடன், சாறுகள் ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டங்களைக் கொண்ட ஒட்சியெதிர்ப்புச் செயற்பாட்டினையும் கொண்டிருந்தன. எனினும், வடிகட்டக்கூடிய மூலக்கூறுகளினுள் பாரிய மூலக்கூறுகள் உடைக்கப்பட்டிருந்தால் ஒட்சியெதிர்ப்புச் செயற்பாடும், வேறு உயிரக தீவிரமான சேர்வைகளும் அதிகரிக்கப்பட முடியும் என உணரப்பட்டது. இவ்வாறாக, வடிகட்டலுக்கு முன் நொதியரீதியிலான நீரகற்றல் நடத்தப்பட்டதுடன், ஆய்வுகூட ஆய்வுகளின் போது உயிரகதீவிரமான சேர்வைகளின் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மேலும், வடிகட்டல் செய்முறைக்கு மாதிரி மாறுதலற்ற குணகங்களைத் தாபிப்பதன் மூலம் கோட்பாட்டியலிலான அம்சம் கவனத்திற்கெடுக்கப்பட்டது.

### *Helicobacter pylori* தொற்றுதலுக்கு மாற்றுவழி சிகிச்சையளிப்பொன்றாக உயிர்சார்ந்த உணவின் வகுத்தமைப்பு

*Helicobacter pylori* தொற்றுதலுக்கு சிகிச்சையளிப்புக்கான நோயெதிரிகளுக்கான மாற்றுவழியொன்றாக தொழிற்பாட்டிலான உயிர்சார்ந்த உணவின் வகுத்தமைப்பு மேற்கொள்ளப்பட்டது. ஓர் இலக்கிய மதிப்பாய்வு, வளர்ப்புப் பராமரிப்பு, வேறுபட்ட லக்டிக் அமில பக்டீரியா இனங்களின் *H. pylori* எதிர்ப்புத் தாக்கம் ஆகியன ஆராயப்பட்டன. பின்னர் பலதரப்பட்ட மூலப்பொருட்கள் புளிக்கவைக்கப்பட்டதுடன், புளிக்கவைக்கப்பட்ட சுதேசிய அரிசி இனங்கள் குறைந்த கிளைசேமிக் சுட்டியையும், உயர்வான உணவுரீதியிலான நார்களையும் கொண்டிருப்பதாகக் கண்டறியப்பட்டது. புளிக்கும் செய்முறையுடன் இணைந்திருந்த *Pedicoccus, Kocuria* மற்றும் *Saccharomyces* என அடையாளங் காணப்பட்டிருந்த நுண்ணங்கிகள் உயிர்சார்ந்தவை எனக் கண்டறியப்பட்டது.

### ஒட்சியெதிரிகளில் வளமுள்ள அரிசித் தவிட்டுச் சிற்றுண்டிகள்

ஒட்சியெதிரிகளில் வளமுள்ள அரிசித் தவிடு இலங்கையில் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. அரிசித் தவிட்டினை உபயோகித்து ஒட்சியெதிரிகளில் வளமுள்ள சிற்றுண்டியொன்றை விருத்திசெய்வதே கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். லப்ஸே நொதியத் தாக்கம் முடைநாற்றத்தை விளைவிப்பதனால், சுமார் இரண்டு நாட்கள் கொண்ட குறுகிய களஞ்சியப்படுத்தல் காலமே அரிசித் தவிட்டினைப் பயன்படுத்துவதில் உள்ள கஷ்டமாகும். முடைநாற்றத்தை வெற்றிகொள்வதற்காக, அரிசி தவிட்டு நிலைத்திருக்கும் முறையொன்று விருத்திசெய்யப்பட்டுள்ளதுடன், ஆய்வுகூடச் சோதனைகள் முடிவடைந்த பின்னர், களஞ்சியப்படுதல் சோதனை நடைமுறையில் இருந்தது.

**மர ரயர் பொதிப்படுத்தல் சட்டங்களில் பங்கசுத் தாக்குதலைக் கட்டுப்படுத்தல்**

முதன்மையான ரயர் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி நிறுவனமாக லோட்ஸ்ரார் பிறை. லிமிற்றெற் விளங்குகின்றது. மர ரயர் பொதிப்படுத்தல் சட்டங்கள் மீது பங்கசு தாக்குதல் அத்தகைய தாக்குதலுக்கு நின்றுபிடிப்பதற்கு மரம் பரிகரிக்கப்பட்ட போதும் அவதானிக்கப்பட்டது. அவர்களது ஏற்றுமதிகளை இது பாதித்ததினால் பிரச்சனையை தீர்த்துவைக்குமாறு கை.தொ.நிறுவனத்தை நிறுவனம் கோரியிருந்தது. மரச் சட்டங்கள் மீது பங்கசு தாக்குதல்களைத் தடுப்பதற்கு முறையொன்றை கை.தொ.நி. விருத்திசெய்ததுடன், வாடிக்கையாளருக்கு பிரத்தியேகமற்ற அடிப்படை மீது தொழில்நுட்பத்தைக் கைமாற்றியது.

**பிரச்சனையைக் களைதல் - திண்ம ரயர் வெடிப்பு**

செய்முறையின் போது கறுத்த தூளுடன் பதப்படுத்தும் போது ‘ரயர் வெடிப்பினையும்’, தடித்த திரவ வெளியேற்றமொன்றையும் முன்னணிவாய்ந்த திண்ம ரயர் தயாரிப்பாளர் ஒருவர் அடையாளங் கண்டார். தூள் மற்றும் திரவ வெளியேற்றத்திற்கான காரணங்களை கை.தொ.நி.இன் பொருள் விஞ்ஞானிகள் அடையாளம் கண்டதுடன், பிரச்சனையைச் சீரமைப்பதற்கு கைத்தொழிலுக்கு உதவியளித்தனர்.

**சிமெந்துடன் பொஸோலொனிக் பொருளில் ஆகக்கூடுதலான கலப்பு நிலைமைகளை அடையாளம் காணுதல்**

மின்வலு பொறிகளிலிருந்து எதிர்விளைவு காட்டுகின்ற கழிவு உற்பத்திப்பொருளொன்றாக பொஸோலொனிக் பொருள் அல்லது அமோபோரஸ் சிலிக்கா விளங்குகின்றது. கலப்பிலான நீரியல் சிமெந்தைப் பெறுவதற்காக சாதாரண போர்ட்லண்ட் சிமெந்துடன் பொருள் கலக்கப்படுகின்றது. பொஸோலோனிக் பொருளாக நுரைச்சோலை நிலக்கரி மின் பொறியிலிருந்து கழிவு பறத்தல் சாம்பலைப் பயன்படுத்துவதற்கு கை.தொ.நி.இன் உதவியை மொத்த சிமெந்து இறக்குமதியாளர்களில் ஒருவர் நாடினார். கருத்திட்டத்தை பொருட்கள் ஆய்வுகூடம் பொறுப்பேற்றதுடன், வாடிக்கையாளருக்காக பறத்தல் சாம்பலுக்கும், சாதாரண சிமெந்துக்குமான ஆகக்கூடுதலான கலப்பு நிலைமைகள் விருத்திசெய்யப்பட்டன.

**சரும நோய்களுக்காகப் பயன்படுத்தப்படும் வடிநீரொன்றின் ஒளிப்பட இரசாயன மற்றும் நுண்ணெதிரி செயற்பாடுகளின் பகுப்பாய்வு**

இந்தியாவிலிருந்து வரும் மருந்தின் புராதன முறையொன்றே “சித்த” ஆகும். எனினும், வேறு பாரம்பரியமான முறைகளுடன் சேர்த்து இது இலங்கையில் பயன்படுத்தப்படுகின்றது. சரும நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் 12 தாவரங்களிலிருந்து 13 தாவர கலவைக் கூறுகளைக் கொண்டுள்ள பறங்கிப்பாடி குடிநீர் என்ற வடிநீரொன்று நோய்க் காவிகளின் சிகிச்சைநிலைசார் தனிப்படுத்திகளுக்கு எதிராகச் சோதிக்கப்பட்டது, மேலும், அந்த 12 தாவரங்களிலிருந்து நீர் பிரித்தெடுப்புகளும், எண்ணெய்களும் தனிப்படுத்தப்பட்ட சரும நோய்காவிகளுக்கு எதிராகச் சோதிக்கப்பட்டன. 12 தாவர இனங்களில் 5 மட்டுமே நோய்க்காவிகளுக்கு எதிராகத் தீவிரம்வாய்ந்தமை என வெளிப்படுத்தப்பட்டது. ஆய்வுகூடச் சோதனைகள் முடிவடைந்துள்ளதுடன், சரும தைலமொன்றினதும், களிம்பொன்றினதும் தயாரிப்பு தற்போது நடந்து கொண்டிருக்கிறது.

**வெள்ளை கிரனைட்டிலிருந்து துரு அகற்றல்**

வெள்ளை கிரனைட் மீது கறைபடிதல் அல்லது ‘மஞ்சள் துரு’ கிரனைட் தயாரிப்பாளர்களினால் முகங்கொடுக்கப்படும் ஒரு முக்கியமான பிரச்சனையாகும். பொருட்கள் ஆய்வுகூடம் காரணங்களை அடையாளம் கண்டதுடன், துருவை அகற்றுவதற்கும், அது மீண்டும் வளர்வதைத் தடுப்பதற்கும் சுத்தப்படுத்தல் தீர்வொன்றையும் விருத்திசெய்தது.

## அத்தியாயம் 4 - போட்டித்தன்மைக்கு மட்டக்குறியிடுதல்

### அனல் சக்தி தணிக்கை

**மட்பாண்டத்தில் தொழில்நுட்பத் திறமைக்கான நிலையம் (CENTEC) -** இலங்கையின் மட்பாண்ட கைத்தொழிலின் போட்டித்தன்மையை உயர்த்துவதற்கும், மேம்படுத்துவதற்கும் கை.தொ.நி. தயார்நிலையில் உள்ளது. முக்கிய மட்பாண்ட தொழிற்சாலைகளில் ஒன்றுக்கு அனல் சக்தி தணிக்கையொன்றுக்காக உசாவுகையொன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த அனல் சக்தி தீவிர துறையின் வளர்ச்சியை வளர்ச்சியுறும் சக்தி நெருக்கடிநிலை கணிசமானளவு பாதிக்கின்றது என்பதுடன், இத் துறையைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானதாகும்.

இரு மட்பாண்ட தொழிற்சாலைகளில் சூளைகளின் தொழிற்பாடுகளை அவதானித்த பின்னர், அனல் தணிக்கைக்காக லங்கா வோல்ரைல்ஸ் PLCஇல் உள்ள சூளையொன்று தெரிவுசெய்யப்பட்டது. சூளைத் தொழிற்பாட்டின் சிக்கனத்திற்கும் அத்துடன் மட்பாண்டத்தின் காபன் அடிச்சுவட்டினைக் குறைப்பதற்கும் உயர்ந்தளவில் குறிப்பிடத்தக்க பெருமளவு சக்தி சேமிப்பு விருப்புக்கள் பரிந்துரைக்கப்பட்டதுடன், அவை ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளன.

### நடைமுறையிலான சுகாதாரப் பராமரிப்பின் கழிவு முகாமைத்துவ முறைமையின் மதிப்பாய்வு

புற்றுநோய் நோயாளர்களின் குணங்குறியறிதலுக்கும், சிகிச்சையளிப்புக்கும் மஹரகமவில் உள்ள தேசிய புற்றுநோய் நிறுவனம் பிரசித்தமானது. வைத்தியசாலை வளவில் ரஸாலி மருத்துத் தொகுதி என்ற பெயரிலான ஒரு நவீன புற்றுநோய் சிகிச்சையளிப்பு அலகு நிருமாணத்தின் கீழ் உள்ளது. மருத்துச் சேவை வசதிகளை மேம்படுத்துவதற்கு சமாந்தரமாக, சூழல்ரீதியில் நிலைத்திருக்கத்தக்கதன்மையில் வைத்தியசாலையைப் பராமரிக்குமுகமாக வைத்தியசாலையில் சுகாதாரப் பராமரிப்பின் கழிவு முகாமைத்துவ முறைமையை மேம்படுத்துவதற்காக வைத்தியசாலை நிருவாகம் ஆர்வம் கொண்டுள்ளது. வைத்தியசாலையிலிருந்து தோற்றுவிக்கப்படும் கழிவு நீரின் முகாமைத்துவத்திற்காக கருத்திட்டமொன்றை சுகாதார அமைச்சு ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. வைத்தியசாலையின் நடைமுறையிலான கழிவு முகாமைத்துவ நடைமுறைகளை மதிப்பாய்வதற்கும், நடைமுறையிலான முறைமையில் அடையாளங் காணப்பட்டுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு வழிகாட்டல்களை வழங்குவதற்கும் கை.தொ.நி.இல் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

நடைமுறையிலான தொழிற்பாட்டு நடைமுறைகள், WHO வழிகாட்டல்கள் மற்றும் நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் ஆகியவற்றை ஆய்வுசெய்யும் கை.தொ.நி.இனால் வழிகாட்டல்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன.

### விரைவு தடுத்துநிறுத்தல் படகின் அதிர்வு மட்ட அளவீடு

சோலஸ் மரைன் லங்கா (பிறை.) லிமிற்றெற்றிலிருந்து எட்டு உயர் வேக துப்பாக்கிப் படகுகளை இந்தியக் கடற்படை கொள்வனவு செய்துள்ளதுடன், என்ஜினில் செயற்றிறனை மதிப்பாய்வதற்காக அளவிடப்பட்ட காரணிகளில் ஒன்று அதிர்வாகும். இந்திய கப்பற்றொழில் அளவீட்டு பதிவாளரிடமிருந்து வெளிவாரி வாழ்க்கைத்தொழில்புரிபவர்களுடன் ஒன்றுசேர ISO 10816-6:1995க்கு எதிராக அளவீடுகளை கை.தொ.நி. மேற்கொண்டது. அதிர்வு தீவிரத் தரங்களுக்கு ஏற்ப அதிர்வு அளவீடுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### BBQ நிலக்கரி கல்கரிக்கட்டியின் தர உறுதிப்பாடு

தூண்டப்பட்ட நிலக்கரியின் உற்பத்தியில் கழிவு உற்பத்திப்பொருளொன்றாக விளங்கும் நிலக்கரித்தூள் BBQ நிலக்கரி கரிக்கட்டிகள் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஏற்றுமதி செய்வதற்கு, செய்முறையிலும், அத்துடன் இறுதி உற்பத்திப்பொருளிலும் தரத்தை உறுதிப்படுத்துவது முக்கியமான நடவடிக்கையொன்றாகும். உற்பத்திப்பொருளின் தரத்தை மேம்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் இலங்கையில் உள்ள BBQ நிலக்கரி கல்கரிக்கட்டி

தயாரிப்பாளர்களில் ஒருவருக்கு கை.தொ.நி. உதவியளித்தது. எரியூட்டல் நேரம், கலோரீதியிலான பெறுமதி, வெப்பநிலை போன்ற எரியூட்டல் சாராமாறிகள் மீதான சோதனை முறைகள் உட்பட தரத்தை உறுதிப்படுத்தும் கை.தொ.நி. செயற்றிட்டத்தை அவர்களது டானிஷ் இறக்குமதியாளர் பாராட்டியுள்ளார்.

## மதிப்பாராய்தல் ஊடாக தரத்தைப் பராமரித்தல்

### மருத்துவத் துறைகளுக்கு தத்துவமளிக்கப்பட்ட மதிப்பாராய்தல் சேவைகள்

கை.தொ.நி. எடையளவியல் ஆய்வுகூடத்திலிருந்து தத்துவமளிக்கப்பட்ட மதிப்பாராய்தல் சேவைகளை இலங்கையில் உள்ள பிரதான மருத்துவ சோதித்தல் ஆய்வுகூடங்களான நவலோக ஹொஸ்பிட்டல்ஸ் (பிறை.) லிமிற்றெற், ஆசிரி ஹொஸ்பிட்டல்ஸ் (பிறை.) லிமிற்றெற் மற்றும் லங்கா ஹொஸ்பிட்டல்கள் கோர்ப்பரேஷன்ஸ் PLC ஆகியன தொடர்ந்ததுடன், சோதித்தல் அறிக்கைகளின் செம்மைத்தன்மையை மேம்படுத்துவதும், இவ்வாறாக தரத்திலான மருத்துவ சேவைகளை நாடும் நோயாளர்களுக்கு தரத்திலான சோதித்தல் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதுமே இதன் பிரதான நோக்கமாகும்.

### BOI நிறுவனங்களுக்கு தத்துவமளிக்கப்பட்ட மதிப்பாராய்தல் சேவைகள்

ISO 9000 சான்றுப்பத்திரத்தைப் பெற்றுள்ள நொரரெல் (பிறை.) லிமிற்றெற், நொரரெல் இன்ரர்நெஷனலல் (பிறை.) லிமிற்றெற், ∴பிலின்ரெக் டிரான்ஸ்டியூஸோர்ஸ் லிமிற்றெற், உனிச்சிலா பிறை. லிமிற்றெற், பொடிலைன் (பிறை.) லிமிற்றெற் போன்ற பெருமளவு BOI நிறுவனங்கள் கை.தொ.நி. எடையளவியல் சேவைகளைப் பெற்றுக்கொண்டன. சர்வதேசச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் தமது உற்பத்திப்பொருட்களின் தரத்தைப் பராமரிப்பதற்காக தத்துவமளிக்கப்பட்ட மதிப்பாராய்தல் சேவைகளைப் பெறுவதை அவை தொடருகின்றன.

### வேறு நாடுகளுக்கு மதிப்பாராய்தல் சேவைகள்

ISO 17025 தத்துவமளிப்பினைப் பெறும் முயற்சியொன்றாக, சோதனை நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் தமது ஆய்வுகூட உபகரணங்களை மதிப்பாராய்வதற்காக கை.தொ.நி.இன் கைத்தொழில் எடையளவியல் ஆய்வுகூடத்தின் (IML) சேவைகளை மாலைதீவின் மருத்துவ சுகாதார ஆய்வுகூடம் மற்றும் பாகிஸ்தானின் குவாஷி ரிசேர்ச் இன்ரர்நெஷனல் (பிறை.) லிமிற்றெற் ஆகியன பெற்றுக்கொண்டன. சூட்டடுப்புகள், அடைகாப்பான்கள், அதியமுத்த கொதியடுப்புகள், பகுப்பாய்வு தராசுகள், நீர் தொட்டிகள் மற்றும் நிறைபடிக்கற்களின் தொகுதிகள் போன்ற ஆய்வுகூட உபகரணங்கள் மதிப்பாராயப்பட்டன. ஐந்து வருடங்களுக்கு மேலாக IMLஇனால் இரு வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

### உட்பிரதேசத்திற்குரிய மருத்துவத் தாவரங்கள்

மருத்துவப் பெறுமதிகளுடனான பத்து உட்பிரதேசத்திற்குரிய தாவரங்கள் உருவவியல்ரீதியாகவும், நுணுக்குக்காட்டிரீதியாகவும், இரசாயனரீதியாகவும் மற்றும் பிறப்பியல்ரீதியாகவும் அவற்றின் அடையாளத்தைத் தாபிப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டன. பத்து தாவரங்களும் வருமாறு: *Osbeckia octandra (L.) DC. (Heen bovitiya), Vernonia zeylanica (L.) Less. (Pupula), Curcuma albiflora Thw. (Harankaha), Nepenthes distillatoria L.(Bandura), Walidda antidysenterica (L.) M. Pichon (wal idda), Berberis zeylanica (Daruharidra bheda), Canarium zeylanicum (Kekuna), Kokoona zeylanica (Kokum), Argyria populifolia Choisy (Giritilla), Rhododendron arboreum Smith. Sub Sp. zelanicum*(Booth.) Tagg.(Maarathmal).

பதப்படுத்தப்படாத, வரண்ட அல்லது தூளிலான தாவரத் திரவியம், தாவரப் பகுதிகளின் பிரித்தெடுப்புகள், தாவரத்தின் ஊர்ஜிதப்படுத்தல், கலப்படக் கட்டுப்பாடு போன்ற பெருமளவு அனுகூலங்களை பெருமளவு விஞ்ஞானரீதியிலான முறைகளைப் பயன்படுத்தி தாவரங்களை அடையாளம் காணுதல் கொண்டுள்ளது. தற்போது இந்த பத்துத் தாவரங்களுக்கு தாவர அடையாளங்காணல் சேவைகளைக் கை.தொ.நி. வழங்குகின்றது.

## அத்தியாயம் 5 – மாசுக்களை கண்காணித்தலும், தணித்தலும்

### ஈயக் கழிவினால் விளைவிக்கப்பட்டுள்ள சூழல் மாசடைவின் மதிப்பீடு

மனித ஆரோக்கியத்திற்கும், சூழலுக்கும் ஈய அமில மின்கலத் தயாரிப்பிலிருந்து தோற்றுவிக்கப்படும் கழிவு அதிகளவில் அபாயகரமானது என்ற போதிலும், தன்னியக்க வாகனங்கள், தொலைதொடர்பு மற்றும் வேறு தொடர்பான துறைகள் ஆகியவற்றின் முன்னேற்றத்துடன் ஈய அமில மின்கல கைத்தொழிலின் வளர்ச்சி தவிர்க்கமுடியாததாகும். மறுபுறத்தில், பேசல் சமவாயத்தின் கீழ் ஈயத்தைக் கொண்டுள்ள கழிவை ஏற்றுமதி செய்வதற்கு பெருமளவு கட்டுப்பாடுகள் சுமத்தப்பட்டுள்ளன. இவ்வாறாக, நாட்டில் ஈயக் கழிவு மீள்சுழற்சிப்படுத்தல் வசதிகளின் தோதான முகாமைத்துவமும், அதேவேளை, பொருளாதார நன்மைகளுக்காக புதிய ஈய அடிப்படையிலான கைத்தொழில்களை முன்னேற்றுவதும் உயர்வான முன்னுரிமையொன்றாகும்.

இலங்கையில், பட்டாத்த கைத்தொழில் பேட்டையில் ஈய அமில மின்கலங்களைத் தயாரிப்பதற்கான BOI சிறப்புரிமைகளின் கீழ் லியோச் லங்கா பிறை. லிமிற்றெற்றை சீன, லியோச் இன்ரர்நெஷனல் தாபித்துள்ளது. கட்டங்களில் கருத்திட்டத்திற்கு CEA இணக்கப்பாடு வழங்கப்பட்டுள்ளது. ஆய்வொன்றை நடத்துவதற்கு கை.தொ.நி.இடம் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், தீழ்ப்புக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளின் செயற்றிறனை மதிப்பிடுவதற்காக பலதரப்பட்ட நவீன ஆதரவளிக்கும் கருவிகளைப் பயன்படுத்தி, சகல மாசுக் கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பிட்டு, அறிக்கையொன்று வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை மீதான அடிப்படையில் CEA, BOI மற்றும் கைத்தொழில்கள் அமைச்சு ஆகியவற்றுடன் பெருமளவு பின்தொடர் சோதனைகள் நடத்தப்பட்டன. முன்மொழியப்பட்ட திட்டத்தின் பிரகாரம் மாசின் தொடர்ச்சியான கண்காணித்தலும் கை.தொ.நி.க்கு வழங்கப்பட்டது.

### மட்பாண்ட கழிவிலிருந்து உலோக மினுக்கி

உலோக மினுக்கியொன்றாக மட்பாண்ட ஓட்டு உற்பத்தியிலிருந்து கழிவு மட்பாண்ட தூள் விருத்திசெய்யப்பட்டதுடன், மட்பாண்ட தொழில்நுட்ப திறமை நிலையத்தின் ஊடாக கைமாற்றப்படுவதற்கு தயாராக உள்ளது. இது மட்பாண்ட ஓட்டுக் கைத்தொழிலிருந்து கழிவை மீள்-பயன்படுத்துவதற்கான முறையொன்றை வழங்கும்.

### தெற்கு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அடிமட்டத் தரவுச் சேகரிப்பு

நாட்டின் தென் மாகாணத்தில் இரு அபிவிருத்திக் கருத்திட்டங்களின் சூழல் தாக்க மதிப்பீட்டுக்கான (EIA) நடைமுறையிலான இரைச்சல் மற்றும் அதிர்வு அளவீடும் அத்துடன் சூழவுள்ள வளியின் தரத்தை சோதித்தலும் கில்ஸ் இன்ரர்நஷனல் (பிறை.) லிமிற்றெற்றினால் கை.தொ.நி.க்கு வழங்கப்பட்டது. மிர்ஸ்ஸிபிலவில் புதிய EPZஐயும், சூரியவெவவில் IPZஐயும் அத்துடன் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தையும், மத்தள விமான நிலையத்தையும் இணைக்கும் கடுகதிசாலையையும் கட்டுதலே இரு கருத்திட்டங்களாகும். நடைமுறையிலான இரைச்சல் மற்றும் அதிர்வு மட்டங்களை மதிப்பாய்வதற்கு மேலதிகமாக, கருத்திட்டங்கள் முடிவடைந்த பின்னர் சுற்றுச்சூழல்களில் உத்தேசமாக இரைச்சலினதும், அதிர்வினதும் தாக்கத்தை மதிப்பாயுமாறு கை.தொ.நி. நிபுணர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. இரு கருத்திட்டங்களுக்கும் இரைச்சல் தேசப்படங்களை கை.தொ.நி. தோற்றுவித்துள்ளதுடன், அவை சம்பந்தப்பட்டவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### மாத்தறை - பெலியத்தை ரயில்வே விஸ்தரிப்புக் கருத்திட்டத்திற்கான அடிமட்ட தரவுச் சேகரிப்பு

போக்குவரத்து அமைச்சின் வேண்டுகோளின் பேரில், அடிமட்ட சூழல் தரவுகளின் அதாவது இரைச்சல், அதிர்வு, வளியின் தரம் மற்றும் நீரின் தரம் ஆகியவற்றின் தரவுகளின் சேகரிப்பினை கை.தொ.நி. ஆரம்பித்துள்ளது. இது சூழல், மக்கள் மற்றும் உத்தேசமான ரயில்வேக்கு மிகவும் கிட்டியதாக இல்லாத போதும் வெஹரஹேன மற்றும் வெவ்ருக்கன்னல போன்ற புராதன ஆலயங்கள் ஆகியன மீது சொல்லப்பட்ட செயற்றிட்டத்தின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கும், மதிப்பாய்வதற்கும் உதவும். இக் கருத்திட்டம் சீன எடையளவியல் கூட்டுத்தாபனத்தின் முகவர்கள், உசாவலர்கள் மற்றும் CEAஇன் அலுவலர்கள் ஆகியோருடன் சேர்ந்து செய்யப்படுகின்றது.

## அத்தியாயம் 6 - மனித சேமநலனுக்கும், சமூக-பொருளாதார மேம்பாட்டுக்குமான தொழில்நுட்பம்

### உயிர்சார்ந்த செயற்பாட்டுடன் நொதிக்க வைக்கப்பட்ட மீன்

ஜாடி செய்யும் நடைமுறையானது ஊடுபரவல் நீரகற்றியின் ஊடாகவே அன்றி புளிக்கவைத்தலின் ஊடாக அல்ல என்பதை 2012இல் செய்யப்பட்ட பாரம்பரியமாக உற்பத்தியாகும் ஜாடி மீதான பூர்வாங்க அளவீடும், ஆய்வுகூட ஆய்வுகளும் வெளிப்படுத்தின. மேலும், நடைமுறையின் சுகாதார நிலைமைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையல்ல எனவும் கண்டறியப்பட்டது. சுகாதாரமான ஜாடி தயாரிக்கும் நடைமுறை விருத்திசெய்யப்பட்ட பின்னர், உயிர்சார்ந்த செயற்பாட்டுடனான புளிக்க வைக்கப்பட்ட மீனை தயாரிப்பதற்கு ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. புளிக்கவைத்த மைக்ரோபியா வளர்ப்பு பெறப்பட்டுள்ளதுடன், உயிர்சார்ந்த செயற்பாட்டுடன் சுகாதாரரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க புளிக்க வைக்கப்பட்ட மீனை உற்பத்தி செய்வதற்கான ஒரு புதிய செய்முறையை அறிமுகப்படுத்தும் குறிக்கோளுடன் புளிக்க வைக்கப்பட்ட மீன் மீதான ஆராய்ச்சி நடைமுறையில் உள்ளது.

### ஆட்டிறைச்சியில் நாய் இறைச்சி கலப்படத்தினைக் கண்டுபிடிப்பதற்கான உயிரகத்தொழில்நுட்பம்

இறைச்சியினதும், இறைச்சி உற்பத்திபொருட்களினதும், விசேடமாக உயர்வான சந்தைப் பெறுமதி கொண்ட இறைச்சி வகைகளின் கலப்படம் உலகம் பூராவும் இடம்பெறுகின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில், மோசடியிலான பதிலீட்டின் சாட்சியத்தை வழங்கும் கஷ்டமான பணியை உணவு பகுப்பாய்வாளர்கள் எதிர்நோக்குகின்றார்கள். உண்மையான இறைச்சிக்கான பதிலீடாக நாய், பூனை, எலி அத்துடன் சில வேளைகளில் குதிரை இறைச்சி சேர்க்கப்படுவதுடன், இது ஆரோக்கியமானதல்ல என்பதுடன், ஒழுக்கவியல்ரீதியாகவும், மருத்துவரீதியாகவும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

கலப்படத்தை அடையாளம் காண்பதற்காக கை.தொ.நி.இல் PCR ஒன்று விருத்தி செய்யப்பட்டுள்ளது. DNA பகுப்பாய்வு மீதான அடிப்படையிலான சோதனையானது விலங்கு இறைச்சியையும், இறைச்சி உற்பத்திப்பொருட்களையும் அடையாளம் காண்பதில் மிகவும் செம்மையானதாகும். DNA உயர்ந்தளவில் வெப்பவியலானது என்பதனால், அடையாளங் காட்டலை சூழல் நிலைமைகள் பாதிக்கமாட்டா.

### வாகன ஒலியெழுப்பி இரைச்சல் மீதான விழிப்பியல் செயற்றிட்டம்

கை.தொ.நி. நிபுணர்களின் உதவியுடன் CEAஇனால் வரையப்பட்ட வாகன ஒலியெழுப்பி இரைச்சல் ஒழுங்குவிதி தற்போது அமுலில் உள்ளது. எனினும், பெருமளவு சாரதிகளும், பொதுமக்களும் ஒழுங்குவிதிகளையிட்டு அறியாதிருக்கின்றனர். புதிய ஒழுங்குவிதிகள் மீது விழிப்பியலை உருவாக்கும் நோக்கத்துடன், எழுந்தமானரீதியாக தெரிவுசெய்யப்பட்ட வாகனங்களின் வாகன ஒலியெழுப்பி இரைச்சலை அளவிட்டு, தீர்வையிலான நடவடிக்கைகள் மீது சாரதிகளுக்கு அறிவிப்பதற்கென CEA, பொலிஸ் மற்றும் கை.தொ.நி. ஆகியன இணைந்து செயற்றிட்டமொன்றை நடத்தின. முதலாவது செயற்றிட்டம் மாலபே, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மாவத்தையிலும், அதைத் தொடர்ந்து கொழும்பு நகரத்தில் பெருமளவு வேறு இடங்களிலும் நடைபெற்றது.

## அத்தியாயம் 7 - மகாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள்

### மருந்தாக்கல் விஞ்ஞானங்களினதும், இரசாயனத் தொழில்நுட்பத்தினதும் மீதான உலக பேராளர் மகாநாடு

USA, சர்வதேச இயற்கை, சுகாதாரப் பராமரிப்புச் சங்கமானது INCஇன் முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுமுகமாக, இலங்கை, கொழும்பில் 2013 டிசம்பர் 16 முதல் 18 வரை மருந்தாக்கற் விஞ்ஞானங்களினதும், இரசாயனத் தொழல்நுட்பத்தினதும் மீதான உலக பேராளர் மகாநாடு நடைபெற்றது. தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், இலங்கையின் கொழும்புப் பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம் மற்றும் USA சர்வதேச இயற்கை, சுகாதாரப் பராமரிப்பு சங்கம் INC ஆகியனவற்றினால் நிகழ்ச்சி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

சுகாதாரப் பராமரிப்புடன் இயற்கையையும், அதன் உறவையும் புரிந்துகொள்வதற்கான முயற்சியை எடுக்கும் விஞ்ஞானிகளின் குழுவொன்றை, USA, சர்வதேச இயற்கை, சுகாதாரப் பராமரிப்பு சங்கம் INC கொண்டுள்ளது. இயற்கை மற்றும் சுகாதாரப் பராமரிப்புக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பொது விழிப்பியல் ஆகியவற்றை மேம்படுத்துவதே சங்கத்தின் குறிக்கோளாகும்.

நாற்பது உள்நாட்டு பங்கெடுப்பாளர்களுடன் சேர்த்து இந்தியா, மலேஷியா, பிரான்ஸ் மற்றும் கென்யா ஆகியவற்றிலிருந்து இந்நிகழ்ச்சியில் 100க்கு மேற்பட்ட விஞ்ஞானிகள் பங்கெடுத்தனர். பேராளர் மகாநாட்டின் நான்கு கருப்பொருள்கள் வருமாறு:

- மருந்தாக்கற் விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்பம்
- தரக் கட்டுப்பாடு, தரப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு
- இயற்கையான உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேர்க்கை
- பார்மாகோனினோமிக்ஸ், உயிரகத்தொழில்நுட்பம் மற்றும் நனோதொழில்நுட்பம்

அத்துடன், இந்தக் கருப்பொருட்களின் கீழ், பதினான்கு முழுநிறைவான விரிவுரைகள், எட்டு வாய்மொழியிலான சமர்ப்பணங்கள் மற்றும் 40 சுவரொட்டிச் சமர்ப்பணங்கள் நடைபெற்றன.

உலகத்தைச் சுற்றியுள்ள அதிக அனுபவம் கொண்டவர்களுக்கும், வளர்ந்து வரும் விஞ்ஞானிகளுக்கும் மருந்தாக்கற் விஞ்ஞானங்களிலும், இரசாயனத் தொழில்நுட்பத்திலும் முன்னேற்றங்களையும், புதிய அறிவையும் பரிமாறிக்கொள்வதற்கான மேடையொன்றை பேராளர் மகாநாடு வழங்கியது.

### வருடாந்த ஆராய்ச்சிக் கருத்துக்கோவை 2013

“புத்தாக்க ஆராய்ச்சியினதும், முன்னேற்றத்தினதும் ஊடாக விஞ்ஞானரீதியிலான தொழில்துறை ஆராய்ச்சியை முன்னேற்றுதல்” என்ற கருப்பொருளின் கீழ், கொழும்பில் 2013 ஒக்ரோபர் 23இலும், 24இலும் முதலாவது கை.தொ.நி. ஆராய்ச்சிக் கருத்துக்கோவை நடைபெற்றது. அங்குரார்ப்பண வைபவம் ப.ஞா.ச.ம.மண்டபத்தில் நடைபெற்றதுடன், தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ பாட்டலி சம்பிக ரணவக்க பிரதம விருந்தினராக விளங்கினார். சேதன இரசாயனத்தின் பேராசிரியரும், பாகிஸ்தான் சர்வதேச இரசாயன, உயிரியல் விஞ்ஞானங்கள் நிலையத்தின் பணிப்பாளருமான கலாநிதி எம்.இக்பால் சௌத்ரி கௌரவ விருந்தினராக விளங்கினார். கடந்த 10 வருடங்களின் போது விஞ்ஞானத்திற்கும், தொழில்நுட்பத்திற்கும் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க பங்களிப்பொன்றுக்காக கடந்த காலத்திலானதும், தற்போதையதுமான கை.தொ.நி. ஆராய்ச்சியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

கை.தொ.நி.இல் தொழில்நுட்ப அமர்வுகள் நடத்தப்பட்டதுடன், இங்கு ஒன்பது கருப்பொருள்களின் கீழ் 39 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

**நிறுவன/கம்பெனி/தாபனரீதியிலான பயிற்சி**

பெயர் சுட்டிக்காட்டுகின்றவாறு, சிறிய, நடுத்தர வியாபார முயற்சிகள் உட்பட உள்நாட்டுக் கைத்தொழிலுக்கான தொழில்நுட்பங்களை விருத்திசெய்வதே நோக்கங்களில் ஒன்றாகும். புதுமாற்றத்திற்குரிய தொழில்நுட்பங்களை கைமாற்றுவதைவிட, கைத்தொழிலுக்கு நேரடியாகவும், நாட்டின் பொருளாதாரத்திற்கு இறுதியாகவும் கைத்தொழிலில் இருந்து ஆளணியினரைப் பயிற்றுவிப்பது இன்னொரு குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும்.

**மீன் அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள்**

- ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கு மீன் பதப்படுத்தல்
- உணவு, விவசாயத் தாபனத்திற்கு மீன் உற்பத்திப்பொருட்களின் பதப்படுத்தல்
- ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கு போத்தலில் அடைக்கப்பட்ட பொரித்த நெத்தலிக் கருவாடு - வெங்காயம் கலப்பு/கட்டாவின் பதப்படுத்தல்
- மீன்பிடித்தொழில், நீரியல்வாழ் வளங்கள் அமைச்சுக்கு மீன் அடிப்படையிலான உற்பத்திப் பொருட்கள்
- கருவாடு மற்றும் மாசிக்கருவாடு உற்பத்தி

**அரிசி அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள்**

- அரிசி அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள் - வர்த்தக, கைத்தொழில் சபைகள் சம்மேளனத்திற்கு அரிசிக்கு பெறுமதி சேர்த்தல்

**நீர், குடிபானங்கள் மற்றும் வேறு பழம் அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள்**

- தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்கு எரிவாயு ஒளிவரைபட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நீரில் பூச்சிநாசினி மீதங்களைப் பகுப்பாய்தல
- பாரம்பரியக் கைத்தொழில், சிறிய வியாபார முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சுக்கு கேகாலையிலும், குருநாகலிலும் கித்துள் குடிபானம் மற்றும் கித்துள் ஜெலி
- பாரம்பரியக் கைத்தொழில், சிறிய வியாபார முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சுக்கு கித்துள் குடிபானம்
- ஜாம் தயாரித்தல்
- ஏற்றுமதிச் சந்தைக்கு ரம்புட்டான் தயாரித்தல்
- பதப்படுத்தப்படாத பொருளொன்றாக பரிமாறுவதற்கு தயார்நிலையிலான பழப் பானங்களினதும், பழக் கூழினதும் பதப்படுத்தல்
- உணவு நீரகற்றல்
- வேறுபட்ட சுவைகளில் ஐஸ் கிறீமின் பதப்படுத்தல்
- இடியப்ப மாவு தயாரித்தல்
- யோகர்ட் தயாரித்தல்

**இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு**

- இலங்கை தேயிலைச் சபைக்கு மேற்கோள் வளர்ப்புப் பராமரிப்பு மீதான நுண்ணுயிரியல் பயிற்சி
- யாழ்ப்பாணம், பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நுண்ணுயிரியல் பகுப்பாய்வில் தர உறுதிப்பாடு - ISO 17025
- எரிவாயு ஒளிவரைபடத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பனை அடிப்படையிலான உற்பத்திப்பொருட்களில் கொழுப்பு அமிலம், மதுசாரங்கள் மற்றும் பூச்சிநாசினி மீதம் ஆகியவற்றின் பகுப்பாய்வு
- அலங்கார உற்பத்திப்பொருட்களின் இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு - இயுரோ கொஸ்மட்டிக்ஸ் (பிறை.) லிமிற்.

- இலங்கை ஆயுர்வேதத் திணைக்களத்திற்கு எரிவாயு ஒளிவரைபடத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மூலிகை உற்பத்திப்பொருட்களில் பூச்சிநாசினி மீதங்களின் பகுப்பாய்வு
- இலங்கைச் சுங்கத்திற்கும், சுதேசிய மருத்துவ நிறுவனத்திற்கும் உயிரக மதிப்பீடுகள்

**கருவிகளைக் கையாளுதல்**

- கமத்தொழில் திணைக்களத்திற்கு கருவிகள் பற்றிய பயிற்சி
- கமத்தொழில் திணைக்களத்திற்கு கருவிகளைக் கையாள்தல் மற்றும் பராமரித்தல்
- ஆய்வுகூட பகுப்பாய்வியல் முறைகள்
- ஒட்சியெதிரி தொழில்நுட்பங்கள்
- உயர் செயற்றிறனிலான திரவ ஒளிவரைபடவியல்
- மூலிகை ஔடதங்கள் மற்றும் அலங்காரப் பொருள் பெறுமதிச் சேர்ப்புத் தொழில்நுட்பங்கள்
- மூலிகை ஔடத தரப்படுத்தல் தொழில்நுட்பங்கள்

**மூலிகைத் தொழில்நுட்பம்**

- மருத்துவத் தாவரங்களின் தரப்படுத்தல்
- களிம்புகள், கழுவுநீர்கள், ஷம்பூக்கள் மற்றும் ஜெல்கள் ஆகியவற்றின் தயாரிப்பு

**பொருட்கள் தொழில்நுட்பம்**

- திரவ டிஷ் வோஷ், கார் வோஷ், திரவ வளி புத்துணர்ச்சியாக்கி, திரவ ஹான்ட் வோஷ், திரவ ஓட்டு சுத்திகரிப்பான், திரவ மலசலகூட சுத்திகரிப்பான் மற்றும் திரவ துணி மென்மையாக்கி
- தெளிவான பிளாஸ்ரிக்குகளுடன் அலங்காரப் பொருட்களைத் தயாரித்தல்
- சிலிக்கோன் அச்சுக்களைப் புனைதல்
- பிளாஸ்டர் ஒ.ஃப் பாரிஸ் அச்சுக்களைப் புனைதல்

**பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சிப் பயிற்சி**

ஆராய்ச்சிப் பயிற்சிக்காக அதன் ஆராய்ச்சி உட்கட்டமைப்பினையும், விஞ்ஞானரீதியிலான நிபுணத்துவத்தையும் கை.தொ.நி. பயன்படுத்துகிறது. ஒவ்வொரு வருடமும், பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பெருமளவு மாணவர்கள் ஒன்றில் முதலாவது பட்டங்களை நிறைவேற்றுவதற்கு அல்லது பட்டத்திற்குப் பிந்திய கற்கைகளுக்கும், பயிற்சிகளுக்கும் கை.தொ.நி.இல் தமது ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை மேற்கொண்டனர்.

2013இன் போது, கை.தொ.நி. ஆராய்ச்சி விஞ்ஞானிகளின் மேற்பார்வையின் கீழ் தமது ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை 70க்கு மேற்பட்ட பட்டதாரி மாணவர்களும், 03 பட்டத்திற்குப் பிந்திய மாணவர்களும் மேற்கொண்டனர்.

## அத்தியாயம் 8 - ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் உற்பத்தித் திறனின் அபிவிருத்தி

### பிஎச்.டி. கற்கைகள்

1. தேஜா ஹேரத், களனி பல்கலைக்கழகத்தில் தனது பிஎச்.டி.ஐ முடித்துக்கொண்டார். ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு - "சில உள்நாட்டில் வளர்க்கப்படும் அரிசி இனங்களில் இரும்பின் உயிரக கிட்டுந்தன்மையை மேம்படுத்தல்"
2. காஞ்சனா அபேசேகர, கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது பிஎச்.டி.ஐ முடித்துக்கொண்டார். ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு - "சில இலங்கையின் பாரம்பரிய அரிசி இனங்களின் பௌதிகவிரசாயன மற்றும் உயிரகதீவிர துணிக்கைகள்"
3. பத்மசிறி ரணசிங்க, கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது பிஎச்.டி.ஐ முடித்துக்கொண்டார். ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு - கித்துள் (*Caryota Urens*) பதனீரினதும், பாணியினதும் உயிரகத் தீவிர துணிக்கைகள் மற்றும் சாற்றினை புளிக்கவைப்பதற்கான சிக்கனத்திலான பயனுள்ள மதுசாரத்தின் தனிமைப்படுத்தல்
4. சுதர்ஷன சோமசிறி, கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது பிஎச்.டி. கற்கைகளை தொடர்ந்தார். ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு - கித்துள் (*Caryota Urens*) பதனீரினதும், உற்பத்திப்பொருட்களினதும் இரசாயன தன்னியல்புத்தன்மை மற்றும் உண்மைப்படுத்தல்
5. சி.எச்.மனோரத்ன, தனது பிஎச்.டி. கற்கைகளை தொடர்ந்தார். ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு - லித்தியம் அயன் மின்கலங்களில் பிரயோகத்திற்கான கிறபைன் மற்றும் கிறபைன் கலவைகளின் தொகுப்பு மற்றும் குணவியல்பு
6. ருவான் வீரசிங்க, தனது பிஎச்.டி. கற்கைகளை தொடர்ந்தார். ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு - தன்னியகத்திலான அமில மழை கண்காணித்தல் நிலையம்
7. டபிள்யு.பி.கே.எம்.அபேசேகர, தனது பிஎச்.டி. கற்கைகளை தொடர்ந்தார். ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு - தெரிவுசெய்யப்பட்ட உயிரகச் செயற்பாடுகளை ஆய்வதன் மூலம் இலங்கைக் கறுவாவின் (*Cinnamomum zeylanicum* Blume) உத்தேசமான சுகாதார நன்மைகளின் மதிப்பீடு
8. சமன் வீரரத்ன, கொழும்பு பல்கலைக்கழகத்தில் பிஎச்.டி. கற்கைக்கு பதிவுசெய்து கொண்டார். ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு - திணிவு திருசியமானிக்கு வெப்பவிரசாயன மாறலிகள் மற்றும் காட்டி முறைமையை மதிப்பிடுவதற்கான புதுமையான முறைகள்

### எம்.எஸ்ஸி/எம்.பில். கற்கைகள்

1. கே.எச்.ரி.அபேசேகர, கொழும்பு பல்கலைக்கழகத்தில் நூலக விஞ்ஞானத்தில் தனது முதுமாணியை முடித்துக்கொண்டார்.
2. எல்.டி.சி.நயனஜித், கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது எம்.பில்.ஐத் தொடர்ந்தார். ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு - சூரிய கலங்களில் பிரயோகத்திற்கான கிறபைனினதும், கலவைக் கூறுகளினதும் தொகுப்பு மற்றும் குணவியல்பு
3. டி.எஸ்.சமரவிக்ரம, கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது எம்.பில்.ஐத் தொடர்ந்தார். ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு - இலங்கையில் மாம்பழங்களின் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களைக் கவனத்திற்கெடுப்பதற்காக இயற்கையான நார்ப்பொருள் அடிப்படையிலான "மிடுக்கான" பொதிப்படுத்தல் பொருளொன்றை விருத்திசெய்தல்.
4. எம்.எஸ்.எம்.அரூஸ், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் தனது எம்.எஸ்சி. கற்கைகளைத் தொடர்ந்தார். ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு - வேலைத்தலத்தில் மேசைமேல் கணனிகளின் சக்தியிலான பாவனை மற்றும் செயற்றிறமையிலான பயன்பாடு
5. இ.எம்.எஸ்.இசங்க, கொழும்பு பல்கலைக்கழகத்தில் பகுப்பாய்விலான இரசாயனவியலில் தனது எம்.எஸ்சி. ஐத் தொடர்ந்தார்.
6. ஹசந்தி திசநாயக்க, மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் நிலைத்திருத்தல் செய்முறை அபிவிருத்தியில் தனது எம்.எஸ்சி.ஐத் தொடர்ந்தார்.
7. கலிக குமாரசிங்க, மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் சூழல் பொறியியலிலும், முகாமைத்துவத்திலும் தனது எம்.எஸ்சி. ஐத் தொடர்ந்தார்.

8. அயந்திக பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக்கழகத்தில் எம்.பில்.க்காக பதிவுசெய்து கொண்டார். ஆராய்ச்சிக் கட்டுரை - இலங்கையில் மாம்பழத்தின் அறுவடைக்குப் பிந்திய தரத்தில் அறுகோண நிறைத்தலிலான உயிரக மெழுகு பரிகரிப்புத் தாக்கத்தின் ஆய்வு
9. நிசல குணசேகர, கொழும்பு பல்கலைக்கழகத்தில் எம்.பில்.க்காக பதிவுசெய்து கொண்டார். ஆராய்ச்சிக் கட்டுரை - இயற்கையான முதிர்ச்சியடைதல் எதிர்ப்பு சேர்வைகளின் ஆய்வு அறுவடைக்குப் பிந்திய நோய் கட்டுப்பாட்டிலும், பயிர் தரப் பேணலிலும் கருவியொன்றாக முதிர்ச்சியடைதல் எதிர்ப்பு முகவர்களில் கட்டுப்பாட்டு வெளியேற்றத்திற்கு உண்ணத்தக்க மெழுகு ஒன்றிணைக்கப்பட்ட ஒழுங்கான விநியோக முறைமை
10. ஆர்.டி.எஸ்.எஸ்.ரணதுங்க, ஐக்கிய அமெரிக்க யேல் பல்கலைக்கழகத்திலும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலும் எம்.பில்.க்காக பதிவுசெய்துகொண்டார். ஆராய்ச்சிக் கட்டுரை - சூழல்ரீதியிலான இரசாயனவியல்.
11. எஸ்.எஸ்.கே.மதகே, பேராதனை பல்கலைக்கழக கமத்தொழில் பட்டத்திற்குப் பிந்திய நிறுவனத்தில் எம்.எஸ்சி.க்காக பதிவுசெய்துகொண்டார்.
12. கே.வி.ரி.குணவர்தன, பேராதனை பல்கலைக்கழக கமத்தொழில் பட்டத்திற்குப் பிந்திய நிறுவனத்தில் எம்.எஸ்சி.க்காக பதிவுசெய்துகொண்டார்.
13. ஆர்.பி.நிலுஷா, கொழும்பு பல்கலைக்கழகத்தில் சூழல் முகாமைத்துவத்தில் எம்.எஸ்சி.க்காக பதிவுசெய்துகொண்டார்.
14. எ.எ.எம்.ரி.அதிகாரி, மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் எம்.பில்.க்காக பதிவுசெய்து கொண்டார். ஆராய்ச்சிக் கட்டுரை - இலங்கையின் நிலைமையின் கீழ் உலோகப் பொருட்களின் துரு நடத்தையின் எதிர்வுகூறல்.

### பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமா

1. தினேஷ்கா பிரியங்கனி, கொழும்பு பல்கலைக்கழகத்தில் தயாரிப்பு முகாமைத்துவத்தில் பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமாவுக்காக பதிவுசெய்துகொண்டார்.
2. என்.கீகியனகே, கொழும்பு பல்கலைக்கழகத்தில் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் தனது பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமாவைத் தொடர்ந்தார்.
3. ரோஷானி பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக்கழகத்தில் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமாவுக்காக பதிவுசெய்துகொண்டார்.

### குறுகிய காலப் பயிற்சி/கூட்டங்கள்/மகாநாடு

### வெளிநாட்டுப் பயிற்சி

1. திலக் குணசேகர, ஜப்பான், கிரட்டிக்ஸுவாவில் நடைபெற்ற “கைத்தொழில் மாசு கட்டுப்பாட்டு முகாமைத்துவம்” மீதான JICA நிதிப்படுத்தலிலான சர்வதேச பயிற்சிச் செயற்றிட்டமொன்றில் பங்கெடுத்தார் (16 ஜனவரி - 26 ஏப்ரல், 2013)
2. டி.சி.எச்.திரிமான்ன, இந்தோனேஷியா, ஜகார்த்தா பிஸிகாலிச் ரெக்னிஷ்பன்டெசன்ஸ்ரெயிறினால் ஒழுங்குசெய்யப்பட்ட PT நிபுணர்களுக்கான மேம்படுத்தப்பட்ட பயிற்சி என்ற APLAC - PTB பயிற்சி செயற்றிட்டத்தின் மூன்றாவது செயலமர்வில் பங்கெடுத்தார் (4 - 7 பெப்ரவரி, 2013).
3. டபிள்யு.எம்.எஸ்.விஜேசிங்க மற்றும் பி.ரி.டீ சில்வா, ஆகியோர் பாகிஸ்தான் குவாஷி ரிசேர்ச் இன்டர்நஷனலில் ‘தராசுகளின் அதேயிடத்திலான மதிப்பாராய்தலில்’ பங்கெடுத்தனர் (20 - 23 ஜனவரி 2013).
4. எ.எம்.கே.ஆர்.ஜயதிலக்க, இந்தியாவில் ‘மூலோபாயத்திலான போட்டிக்குரியதும், கூட்டுமுயற்சியிலானதுமான அனுகூலத்திற்காக புலமை ஆதனத்தை திரட்டுதல்’ மீதான செயற்றிட்டமொன்றில் பங்கெடுத்தார் (14, 16 பெப்ரவரி, 2013).
5. ஜி.எ.எஸ்.பிரேமகுமார, SAARC அமைச்சர்களின் விஞ்ஞான, தொழில்நுட்பத்தின் மூன்றாவது கூட்டத்திலும், SAARC செயலகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட அதன் முந்திய சிரேஷ்ட அலுவலர்களின் கூட்டத்திலும் பங்கெடுத்தார், டாக்கா, பங்களாதேஷ் (6 - 7 மார்ச் 2013)

6. ஜி.எ.எஸ்.பிரேமகுமார, இலங்கை - ஜேர்மன் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட ‘SME கொள்கை அபிவிருத்தி வெளிப்படுத்தல் வருகை தரல்’ மீது பங்கெடுத்தார், தென் கொரியா (31 மார்ச் - 6 ஏப்ரல், 2013)
7. எம்.ஆர்.டி.எம்.திலகசிறி, UNIDO மற்றும் KRISSஇனால் ஒழுங்குபடுத்தப்பட்ட எடையளவியலில் KRISS UNIDO பயிற்சிச் செயற்றிட்டத்தில் பங்கெடுத்தார், கொரியா (15 - 25 ஏப்ரல் 2013).
8. இ.என்.விஜேதீர, ஜப்பானிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 2013 மொன்புகககுஷா புலமைப்பரிசிலில் பங்கெடுக்கின்றார் (ஏப்ரல் 2013 - மார்ச் 2015).
9. இல்மி ஹேவாஜூலிகே, சீனா, ஷங்காயில் உணவுப் பாதுகாப்புக்கான சிறந்த நடைமுறையினதும், உணவு கதிர்வீச்சின் தர (சுகாதார) பிரயோகங்களினதும் மீதான IAEA/RCA செயலமர்வில் பங்கெடுத்தார் (6 - 10 மே 2013)
10. நிசலா குணசேகர, கனடா கியூலெப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட ‘வருகை தரும் விஞ்ஞானி செயற்றிட்டத்தில்’ பங்கெடுத்தார் (29 ஜூன் - 29 செப்ரெம்பர் 2013).
11. என்.பி.லியனவதுகே, சிங்கப்பூரில் ‘உயர்தர தொழில்நுட்பங்களுக்கான பொருட்கள்’ மீதான 7ஆவது சர்வதேச மகாநாட்டில் பங்கெடுத்தார் (30 ஜூன் - 5 ஜூலை, 2013)
12. டபிள்யு.ஆர்.கே.பொன்சேகா, சீனா, பெய்ஜிங்கில் நடைபெற்ற COMSAT & ICICCES இனால் நடத்தப்பட்ட “மிதமான காலநிலை நிலைமை” மீதான சர்வதேசச் செயலமர்வில் பங்கெடுத்தார் (12 - 14 ஜூலை, 2013)
13. ரி.என்.பி.கே.பீரிஸ் மற்றும் ரி.ஜி.என்.பீ.கருணதி, மாலைதீவு உணவு, ஔடத அதிகார சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ‘சாதனங்களின் அதேயிடத்திலான மதிப்பாராய்வில்’ பங்கெடுத்தனர் (13 - 16 ஜூலை, 2013).
14. டி.எஸ்.சமரவிக்ரம, கனடா கியூலெப் பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ‘காய் பழுத்தலுக்கான நிரோதத்திலான் பொருளொன்றை விருத்தி செய்தல்’ ஆராய்ச்சி வெளிப்படுத்தல் வருகைதரலில் பங்கெடுத்தார் (13 ஜூலை - 10 ஓகஸ்ட், 2013).
15. அயந்திக பேர்னாண்டோ, கனடா கியூலெப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட ‘வருகை தரும் விஞ்ஞானி செயற்றிட்டத்தில்’ பங்கெடுத்தார் (13 ஜூலை - 14 ஒக்டோபர், 2013).
16. சமந்தா மதகே, சீனா, CNRIFFIஇனால் நடத்தப்பட்ட ‘அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உணவுப் பதப்படுத்தலும், சாதனங்களின் தெரிவும்’ மீதான பயிற்சிச் செயலமர்வில் பங்கெடுத்தார் (15 ஓகஸ்ட் - 3 செப்ரெம்பர், 2013).
17. இல்மி ஹேவாஜூலுகே, கனடா கியூலெப் பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ‘மூலவுரு வெளிப்படுத்தல் பகுப்பாய்வு’ மீதான பயிற்சியில் பங்கெடுத்தார் (18 - 29 ஓகஸ்ட், 2013).
18. ஜி.எ.எஸ்.பிரேமகுமார, ஐக்கிய அமெரிக்க, மஸஸுசெட்ஸ், ‘மருந்தாக்கல் மற்றும் வாழ்க்கை விஞ்ஞான தொழில்நுட்ப அரங்கு’ மீது பங்கெடுத்தார் (25 - 29 ஓகஸ்ட், 2013).
19. இ.எம்.எஸ்.இசங்க, இந்தியா அகமதாபாத், வியாபார முயற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் ITEC செயற்றிட்டத்தினால் நடத்தப்பட்ட “வியாபார ஆராய்ச்சி முறைகளும், தரவுப் பகுப்பாய்வும்” மீதான பயிற்சி செயற்றிட்டமொன்றில் பங்கெடுத்தார் (1 செப்ரெம்பர் - 26 ஒக்டோபர், 2013).
20. இல்மி ஹேவாஜூலுகே, ஐக்கிய இராச்சியம், கிரென்பீல்ட்டில் ‘சங்கிலிகளில் தரத்தை நிருவகித்தல்’ மீதான சர்வதேச மகாநாட்டில் பங்கெடுத்தார் (2 - 5 செப்ரெம்பர், 2013).
21. ஜே.கே.ஆர்.ஆர்.சமரசேகர, இந்தியா, புது டில்லி மூங்கிலுக்கும், பிரம்புக்குமான சர்வதேச வலைப்பின்னலினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆசிய மூங்கில் மற்றும் பிரம்பு செயலமர்வில் பங்கெடுத்தார் (24 - 27 செப்ரெம்பர், 2013).
22. ஐ.ஆர்.எம்.கோதாகொட, இந்தோனேஷியா NAM S&T நிலையத்தினால் ஒழுங்கு படுத்தப்பட்ட நனோதொழில்நுட்பம் (IWON) 2013 - வியாபார தொலைநோக்குகளை நோக்கி நனோதொழில்நுட்பக் கருத்துருவை கைமாற்றுதல் மீதான சர்வதேசச் செயலமர்வில் பங்கெடுத்தார் (2 - 5 ஒக்டோபர், 2013).
23. என்.அமுனுகொட, சீனா மூங்கிலுக்கும், பிரம்புக்குமான சர்வதேச வலைப்பின்னலினால் நடத்தப்பட்ட மூங்கில் பெறுமதி சங்கிலி அபிவிருத்திக்கான கற்கைச் சுற்றுலா ஒன்றில் பங்கெடுத்தார் (9 - 23 ஒக்டோபர், 2013).

24. ரம்யா பிற்றிபன்னஆரச்சி, மலேஷியா கோலாலம்பூரில் நடைபெற்ற ‘சுகாதார பரிகரிப்பொன்றாக கதிர்வீச்சின் சுகாதார பிரயோகங்களுக்கான சிறந்த நடைமுறைகள்’ மீதான IAEA/RCA நிறைவேற்று முகாமைத்துவக் கூட்டத்தில் பங்கெடுத்தார் (28 - 31 ஒக்ரோபர், 2013).
25. உபேகா ரஜவர்தன, இந்தியா ஹைதராபாத் யூசுப் குடாவினால் நடத்தப்பட்ட ‘மொத்த தர முகாமைத்துவம் மற்றும் ISO 9001: 2008/4001:2004/BS 7799 மற்றும் ஆறு சிக்மா (TQM), தேசிய நுண், சிறிய, நடுத்தர வியாபார முயற்சிகளுக்கான நிறுவனம்’ மீதான பயிற்சி செயலமர்வொன்றில் பங்கெடுத்தார் (12 நொவம்பர் - 4 ஜனவரி, 2014).
26. ஜே.கே.ஆர்.ஆர்.சமரசேகர, இந்தியா சர்வதேச ஓரளவு தரிசு அயனமண்டலங்களுக்கான பயிர் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட ‘புதுமையான தானிய மற்றும் பழ அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள் ஊடாக மனித சுகாதாரத்தையும், உணவையும், போஷாக்கிலான பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தல்’ என்ற தலைப்பிலான இந்திய - இலங்கை இணை ஆராய்ச்சி கருத்திட்டத்தில் பங்கெடுத்தார் (20 - 27 நொவம்பர், 2013).
27. வசுந்தர திவிசேகர, இந்தியா, பட்டன்சேவ் சர்வதேச ஓரளவு பாலை நில அயனமண்டலங்களுக்கான பயிர் ஆராய்ச்சி நிறுவனத்தில் (ICRISAT) கருத்திட்ட ஆரம்ப கலந்துரையாடல் கூட்டத்தில் இணை பிரதான ஆய்வாளராகப் பங்கெடுத்ததுடன், நுண் உயிரியல் தாயேடுகளைத் தரப்படுத்தல் மீதான அடிமட்டப் பணியையும் செய்தார் (22 நொவம்பர் - 6 டிசம்பர், 2013).
28. உதயனி பிந்துஹேவ மற்றும் இல்மி ஹேவாஜூலுகே, தாய்லாந்தில் உணவு மற்றும் குடிபானத் துறையை அவதானிப்பதற்கான கற்கை வருகைதரலொன்றிலும், தாய்லாந்தில் நடைபெற்ற உணவுப் பாதுகாப்பு கருத்தரங்கிலும் பங்கெடுத்தார் (25 நொவம்பர் - 4 டிசம்பர், 2013).
29. பூர்ணிமா ஜயசிங்க, இந்தியா பெங்கலூரில் நடைபெற்ற ‘ஆசிய - பசுபிக் இலக்கரீதி நூலகங்கள்’ மீதான சர்வதேச மகாநாடொன்றில் பங்கெடுத்தார் (9 - 11 டிசம்பர், 2013).

**உள்நாட்டுப் பயிற்சி**

பலதரப்பட்ட உள்நாட்டு நிறுவனங்களினால் நடத்தப்பட்ட பயிற்சிச் செயற்திட்டங்களில் கை.தொ.நி.இன் நூற்றியம்பதுக்கு மேற்பட்ட பணியாட் உறுப்பினர்கள் பங்கெடுத்தனர். செயலமர்வுகளினதும், கருத்தரங்குகளினதும் மற்றும் வேறு பயிற்சி செயற்றிட்டங்களினதும் எண்ணிக்கை 50க்கு மேற்பட்டதாகும்.

## அத்தியாயம் 9 - புதிய முன்னெடுப்புகள்

### புதுமையான தானிய மற்றும் பழ அடிப்படையிலான உயிர்சார்ந்தவை மற்றும் உயிர்ப்புக்கு முற்பட்டவை ஊடாக, மனித ஆரோக்கியத்தையும், உணவையும் மற்றும் போஷாக்கினையும் உறுதிப்படுத்தல்

உயிர்சார்ந்தவை அல்லது நன்மையிலான குடல் அனுசேபத் தாவரவினத்தின் வளர்ச்சியையும், செயற்பாட்டினையும் தூண்டும் உணவு மூலக்கூறுகளே உயிர்ப்புக்கு முற்பட்டவை ஆகும். உயிர்சார்ந்தவையின் அறிவு விஸ்திரிக்கின்ற அதேவேளை, குறைந்த கவனத்தையே உயிர்சார்ந்தவை பெற்றுள்ளது. குடல் உடலுறுப்பின் கூட்டுக்கலவையையும், அனுசேபத்தையும் திரிபுபடுத்துவதில் உயிர்சார்ந்தவை முக்கியமானவையாகும். நான்கு இனங்களைக் கொண்ட குரக்கனினதும், வாழையினதும் உயிர்ப்புக்கு முற்பட்ட உத்தேசத்தையும், வர்த்தக உத்தேசத்துடன் தொழிற்பாட்டிலான உணவின் தயாரிப்பினையும் ஆராய்வதே இவ்வாய்வின் குறிக்கோளாகும்.

### காட்டு இஞ்சியுடன் குடிப்பதற்கு தயார்நிலையிலான குடிபானத்தையும், மூலிகைத் தேயிலையையும் வகுத்தமைத்தல் மற்றும் உயிரகச் செயற்பாட்டினை மதிப்பாய்தல்

அதிகளவு சுவையான மூலிகை உற்பத்திப்பொருள் ஒன்றிணைக்கப்பட்ட தொழிற்பாட்டிலான உணவுகளை வகுத்தமைப்பதும், நுகர்வதுமே உணவுப் பழக்கவழக்கங்களில் ஒரு புதிய போக்காகும். பெருமளவு மருத்துவச் செயற்பாடுகளைக் கொண்டுள்ள *Costus specious* (சி. தெபு; ஆ. Wild ginger) சந்தையில் கிடைப்பதில்லை என்பதை சந்தை விபரப்படுத்தல் வெளிப்படுத்தியுள்ளது. எனவே, இது வர்த்தகரீதியிலான ஆற்றலளவிலான தொழிற்பாட்டிலான உணவொன்றாக அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், காட்டு இஞ்சி மீதான அடிப்படையில் குடிப்பதற்கு தயார்நிலையிலான குடிபானத்தினதும், மூலிகைத் தேயிலையினதும் மீதும், அதன் உயிரகச் செயற்பாட்டினை ஆய்வு செய்வது மீதும் ஆராய்ச்சிப் பணி ஆரம்பித்துள்ளது.

### DNA விசர்நாய்க்கடி ஊசி மருந்தொன்றை விருத்திசெய்தல்

நாய் நோய்த் தடுப்பிற்கு DNA ஊசிமருந்துகள் அசாதாரண விதத்தில் நிலையானவை, பாதுகாப்பானவை, ஏற்றுவதற்கு இலகுவானவை அத்துடன் அவற்றின் அதிகரிப்பிலான உற்பத்தியானது குறைந்த சிக்கலானதாகும். குளிர்சங்கிலிப் பராமரிப்பு அவசியமில்லை என்பதுடன், தற்போது பயன்படுத்தப்படும் கொல்லப்பட்ட அல்லது செயலற்றதாக்கப்பட்ட தடுப்பூசியை விட ஆகுசெலவு வினைதிறன்மிக்கவையாகும். விசர் நாய்க்கடி நோயிலிருந்து தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் இலங்கை வருடாந்தம் சுமார் ரூ.500 மில்லியனைச் செலவழிக்கின்றது.

எனவே, DNA விசர் நாய்க்கடி நோய் வைரஸை விருத்திசெய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், முதலாவது சோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

### பாற்பண்ணைக் கழிவு நீரின் பரிகரிப்புக்கு ஆக்கத்திலான ஈரநிலத் தொழில்நுட்பத்தை விருத்திசெய்தல்

தற்போது பின்தங்கிய பகுதிகளில் சிறிய, நடுத்தர வியாபார முயற்சிகளாக பாற்பண்ணைக் கைத்தொழில்கள் பிரசித்தப்படுத்தப்படுகின்றன. எனினும், பாற்பண்ணைக் கழிவு நீரினை அகற்றுவதற்கு தோதான பரிகரிப்பு முறைகள் பிரயோகிக்கப்பட்டாலன்றி, சூழல் பிரச்சனையொன்றாக கழிவு நீர் வெளிப்படுகின்றது. பாற்பண்ணைக் கைத்தொழில்களின் கழிவு அகற்றுதலுக்கு அதிநவீனமான தொழில்நுட்பம் கிட்டுகின்ற போதிலும், உயர்வான மொத்த மூலதனத்தின் காரணமாக சிறிய, நடுத்தர வியாபார முயற்சிகளுக்கு இது கட்டுப்படியானதல்ல. எனவே, பாற்பண்ணைத் துறையில் சிறிய, நடுத்தர வியாபார முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு ஆகுசெலவு வினைத்திறனான தொழில்நுட்பம் அவசியமானதாகும்.

பாற்பண்ணை கழிவு நீர் பிரச்சினைக்குத் தீர்வாக, 'ஆக்கப்பட்ட ஈர நிலத்தின்' பயன்பாட்டினை கை.தொ.நி.இன் சூழல் தொழில்நுட்பப் பிரிவின் ஆராய்ச்சி விஞ்ஞானிகளும், எந்திரவியலாளர்களும் ஆய்வு செய்கின்றனர். பூர்வாங்க நடவடிக்கையாக, கழிவு நீரிலிருந்து கழிவை அல்லது மிதமிஞ்சிய நைதரசனை, பொசுபரசை அகற்றுவதற்கு பொருத்தமான இனங்களை அடையாளங் காண்பதற்கு பெருமளவு நாணல் இனங்களுடன் தாவர ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. காணி போதுமானளவு உள்ள கிராமியப் பகுதிகளுக்கு கட்டுபடியாகும் தன்மையினதும், பொருத்தத்தன்மையினதும் காரணமாக சிறிய நடுத்தர வியாபார முயற்சி வகுதியில் உள்ள பாற்பண்ணைக் கமக்காரர்களுக்கு நடந்து கொண்டிருக்கும் இக் கருத்திட்டம் கவர்ச்சிகரமான தீர்வொன்றாக இருக்கும்.

## கம-இரசாயனப் பொதிப்படுத்தல் கைத்தொழிலிருந்து கழிவு நீரின் பரிகரிப்புக்கு ஒளியூக்கல் தாக்கி ஒன்றை விருத்திசெய்தல்

சில கம-இரசாயன செய்முறைகளில் தீவிரமான ஆக்கக்கூறுகளின் அழிவுக்கு நீர்ப்பபகுப்பு போதுமானதல்ல. ஒட்சியேற்றம் ஒரு சிறந்த முறையாகும். ஆனால், நச்சத்தன்மையின் காரணமாக உயிரியல் ஒட்சியேற்றமும், அதேபோல, சூழலுக்கு அதிகளவு மாசுபடுத்திகளை மீதங்கள் சேர்ப்பதன் காரணமாக இரசாயன ஒட்சியேற்றமும் சாத்தியமானதல்ல. எனவே, கம இரசாயனக் கைத்தொழில் கழிவு வெளியேற்றத்தின் பரிகரிப்புக்கு ஆகுசெலவு பயனுறுதிவாய்ந்த விருப்பொன்றாக இயற்கையான ஒளியின் கீழ் ஒளிப்பட ஊக்கியிலான ஒட்சியேற்றத்தின் செயல்திறன் பற்றி ஆயப்பட்டுள்ளது. இதில் ஒட்சியேற்றத்தின் பின், மேலதிகமான இரசாயன மீதங்கள் தொடர்ந்துமே இருக்கமாட்டா. ஒரு தாக்கி விருத்திசெய்யப்படுவதுடன், இது நியாயமான ஆகுசெலவொன்றில் பாவனைக்காகக் கிட்டும்.

## வளியினால் பரவும் உப்பின் அளவீடு

வளிமண்டலம் சார்ந்த உவர்த்தன்மை மட்டம் உட்பட பெருமளவு காரணிகள் மீது பாலத்தின் நிருமாணத்திற்கான பதப்படுத்தப்படாத பொருட்களினதும், அமைவிடங்களினதும் தெரிவு அடிப்படையைக் கொண்டுள்ளது. நெடுஞ்சாலைப் பாலங்கள் நிருமாணிக்கப்படவுள்ள 19 வேறுபட்ட அமைவிடங்களில் வளிமண்டலம் சார்ந்த உவர்த்தன்மையை அளவிடுவதில் கை.தொ.நிறுவனத்தை வீதி அபிவிருத்தி அதிகாரசபை கோரியிருந்தது. இரு கட்டங்களில் இக் கருத்திட்டத்தை கை.தொ.நி. மேற்கொண்டிருந்தது. ஒவ்வொரு இரு மாதங்களுக்கு ஒரு தடவை முதலாவது கட்ட அளவீடுகள் எடுக்கப்பட்டன. ஒரு வருடத்திற்கு துருப்பிடித்தலுக்கு மறுதலையிலான/துருப்பிடித்த குறைந்தளவு ஊடுபடுதலை மாதிரிப்படுத்தல் முனைகள் காட்டின. இவ்வாறாக, உவர்த்தன்மை மட்டத்தைப் பொறுத்து, இரண்டாவது கட்டம் மேற்கொள்ளப்படும்.

ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பாலங்களினதும் மற்றும் வேறு உலோகம்சார்ந்த கட்டமைப்புக்களினதும் துருப்பிடித்தலைக் குறைப்பதற்கும், உலோகம்சார்ந்த கட்டமைப்புகளைக் கட்டுவதற்கு பயன்படுத்த எந்தப் பொருட்களைப் பயன்படுத்துவது என்பது பற்றி தீர்மானிப்பதற்கும் முன்னெச்சரிக்கையிலான நடவடிக்கையை எடுப்பதற்கு இவ்வாய்வு தகவலை வழங்கும்.

## உலோகம்சார்ந்த பொருட்களில் துருப்பிடித்தல் நடத்தை

சூழல் மீது உலோக துருப்பிடித்தல் தங்கியுள்ளதுடன், ஆகுசெலவு உயர்வாக இருக்கும் என்பதுடன், பொருளாதாரம் மீது தாக்கமொன்றைக் கொண்டுள்ளது. நிருமாணத்தின் முன், துருப்பிடித்தலைப் பாதிக்கும் சூழல் காரணிகளை அடையாளங் காணுதல் முக்கியமானதாகும்.

| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.5 ஆம் பந்தி | மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களின் மெய்மையாய்விற்காக 04 உத்தியோகத்தர்களை யுடைய மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 13,581,898 பெறுமதியான கணனி மென்பொருள் மற்றும் உப பாகங்கள் மற்றும் ரூபா 4,512,594 பெறுமதியான ஏனைய சொத்துக்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2011 ஏப்ரல் 21 ஆந் திகதிய எம்ஓஎப்பீ/ஈஆர்டீ/2011/1 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் சுற்றுநிருபம் | வெளிநாட்டுவள திணைக்களத்திற்கு அறிவிக்காமல் ரூபா 38,469,075 பெறுமதியான கனடா செயற்திட்டம் மற்றும் ரூபா 9,471,996 பெறுமதியான இந்திய இலங்கை செயற்திட்டம் முறையே 2012 ஏப்ரல் மாதத்தின் போதும் 2013 செப்தெம்பர் மாதத்தின் போதும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. |
| (உ) | 2000 சனவரி 19 ஆந் திகதிய 380 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்று நிருபம் | |
| | (i) 01 ஆம் பிரிவு | ஆலோசனைச் சேவைக்காக முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 7.1 ஆம் பிரிவு | ஆலோசனைச் சேவை வருமானத்தில் நேர்க் கிரயம் கழிக்கப்பட்ட பின்னர் 10 சதவீதம் தொடக்கம் 25 சதவீதம் வரையான தொகை நிறுவனத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| | | திறைசேரியின் விசேட நிதியத்திற்கு 03 மாதங்களுக்கு ஒரு தடவை அனுப்பப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2004 பெப்ரவரி 11 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈஆர்எஸ்ரீ/21-4/வெழும ii ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளரின் கடிதம் | ஒரு உத்தியோகத்தருக்கு இரண்டு மாதச் சம்பளம் அல்லது ரூபா 20,000 தொகை என்ற இரண்டிலும் குறைந்த பெறுமதி ஊக்குவிப்புப் படியாக வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக 307 உத்தியோகத்தர்களுக்கு வழங்கக்கூடிய ஆகக்கூடிய ஊக்குவிப்புப் படி ரூபா 6,140,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,802,397 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2013 ஆம் ஆண்டிற்காக ஒருவருக்கு ரூபா 27,500 படி 395 உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப்படியாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட அளவினைவிட ரூபா 2,962,500 தொகை அதிகரித்து நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீளாய்வாண்டில் நிறுவன செயற்பாடுகளிலிருந்தான விளைவுகள் ரூபா 39,177,699 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 22,628,443 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 16,549,256 அதிகரிப்பினைக் காண்பித்தது. இதற்காக முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வின் அடிப்படையில் திறைசேரி மானியம் பதிவழித்தல் 49 சதவீதத்தினாலும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தியின் அடிப்படையிலான திறைசேரி மானியம் பதிவழித்தல் 46 சதவீதத்தினாலும் வருமானம் 30

சதவீதத்தினாலும் மற்றும் ஏனைய வருமானம் 35 சதவீதத்தினாலும் அதிகரித்தமை காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் நிறுவனத்தின் தொழிற்படு மூலதனம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் 38 சதவீத வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நிறுவனத்தினால் செயற்படுத்தப்படுகின்ற ஆராய்ச்சி செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) தாமதமான செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது 07 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதியை விட 03 மாதங்கள் தொடக்கம் 23 மாதங்கள் வரையான தாமதத்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) ரீஜீ12/00/04 ஆம் இலக்க "Continue the Fabrication of Tape Calibration Facility in IML" செயற்திட்டம் ரூபா 1,000,000 தொகையில் திறைசேரி நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2006 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தை கையாளுகின்ற உத்தியோகத்தர் 2010 சனவரி 17 ஆந் திகதி தொடக்கம் 2012 சனவரி 16 ஆந் திகதி வரை 02 வருட காலம் கற்கை விடுமுறை பெற்றமையின் காரணமாக அந்த செயற்திட்டம் 03 வருட தாமதத்துடன் 2013 திசெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கற்கை விடுமுறை

பெற்ற உத்தியோகத்தருக்குப் பதிலாக வேறு ஒரு உத்தியோகத்தரை ஈடுபடுத்தி செயற்திட்டத்தை தாமதமின்றி வெற்றியடையச் செய்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கற்கை விடுமுறைக் காலம் 2 வருடங்களாக இருந்த போதிலும் செயற்திட்டம் 3 வருட கால தாமதத்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரீஜீ/08/24 ஆம் இலக்க "Replacement of Sulphur Promoting Sqmigat" செயற்திட்டம் மூன்று ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் ரூபா 2,000,000 தொகையான திறைசேரி நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2011 மே மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2014 மே மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டத்திற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 93,482 தொகையான கிரயம் செலவிடப்பட்டிருந்தது. இதில் ஒரு ஆராய்ச்சி உத்தியோகத்தர் 2011 திசெம்பர் 09 ஆந் திகதி ஓய்வு பெற்றுச்செல்வதற்கு தீர்கமானித்திருந்தமையை கருத்திற் கொள்ளாது செயற்திட்டத்தைத் திட்டமிட்டதன் காரணமாக அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன் வேறு ஆராய்ச்சி உத்தியோகத்தரையேனும் ஈடுபடுத்தி செயற்திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) எப்பீ 83 ஆம் இலக்க "Enhancing Environmental Performance in Key Sri Lankan Export Sectors – EEPEx" செயற்திட்டம் ஐரோப்பிய சங்கத்தின் யூரோ 683,528 தொகையான நிதியுதவியின் கீழ் 2009 மார்ச் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2012 ஆகஸ்ட் மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தில் காணப்பட்ட நலிவுகள் காரணமாக அந்தச் சங்கத்தினால் நிதியுதவி வழங்குதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் நட்டத்தை ஈடு செய்வதற்காக 2014 ஆகஸ்ட் 25 ஆந் திகதியில்

உள்ளவாறு முதிர்வடைந்த யூரோ 81,097.48 பெறுமதியான வரவுத்தாள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தில் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் ரூபா 36,644 பெறுமதியான செயலாற்றல் பிணை முறி நீடிக்கப்படாமல் மீளாய்வாண்டில் 05 மாத காலத்திற்காக ரூபா 581,608 தொகை தனியாார் நிறுவனம் ஒன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தில் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக குறித்த கொள்வனவு நடைமுறைகளின் மூலம் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்காக மாதத்திற்கு ரூபா 32,352 இனால் விலை கூடிய மற்றைய நிறுவனம் 2013 நவம்பர் 11 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தது.

4.3 பயன்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,815,377 கூட்டுத்தொகையான 03 வங்கிக் கணக்கு மீதிகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்படாதிருந்ததுடன் அந்தக் கணக்குகளில் உள்ள பணம் மீளாய்வாண்டின் போது உரிய செயற்பாட்டிற்கு அல்லது ஏனைய வினைத்திறனான நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எப்பீ 96 ஆம் இலக்க "Value Addition to Fruits and Vegetables by Clarifying, Concentrating" செயற்திட்டம் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ரூபா 1,920,000 தொகையான நிதியுதவியின் கீழ் 2011 செப்தெம்பர் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2013 செப்தெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 654,886 பெறுமதியான இயந்திரம் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 126,910 தொகையினால் அதிகரித்து மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரம் தேவைகளுக்கு

இணங்காமையின் காரணமாக கணக்காய்வுத்திகதியான 2014 யூன் 25 ஆந் திகதி வரையிலும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 4.4. ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

"Waste Water Treatment Plant" என்ற பெயருடைய இயந்திரக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 10,752,000 தொகையில் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த உப ஒப்பந்தத்தை வழங்குதல் தொடர்பாக சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் செயலாற்றல் பிணை முறியும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உப ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ரூபா 3,648,000 பெறுமதியான முற்பணப் பிணைமுறி 2012 செப்தெம்பர் 20 ஆந் திகதி காலாவதியாகியிருந்ததுடன் அதனை நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சேவைப் பங்களிப்பாளர்களின் கோரிக்கையின் பிரகாரம் 2012 ஏப்ரல் 23 ஆந் திகதி தொடக்கம் 4 மாதங்களுக்குள் இயந்திரக் கூடத்தின் நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2013 மார்ச் மாதத்தின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இயந்திரக் கூடத்தை செயற்படுத்தும் கைநூல் மற்றும் ஏனைய அறிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 17 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பதவியணியினர் நிருவாகம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | ஒப்பந்த | மிகை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 52 | 34 | - | - | 18 |
| மூன்றாம் | 148 | 140 | 12 | 4 | - |
| இரண்டாம் | 106 | 101 | 20 | 15 | - |
| ஆரம்ப | 86 | 60 | 13 | - | 13 |
| | 392 | 335 | 45 | 19 | 31 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை அதிகரித்துக் கொள்ளாமல் மூன்றாம் நிலையிலுள்ள பதவிக்காக ஆராய்ச்சி விஞ்ஞானிகளின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி 09 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பதவிகளுக்கே 11 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையின் கீழ் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) நிறுவனத்திற்குத் தேவையான சிரேஷ்ட நிலையிலுள்ள பதவியான பிரதான கணக்காளர், பிரதான விற்பனை முகாமையாளர் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளில் 5 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் நிரந்தர உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்காக வெற்றிடம் காணப்பட்ட போதிலும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| நிலைமை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| சாரதி | 04 | 03 |
| பயிற்சி | 07 | 02 |
| அரைப் பயிற்சி | 14 | 05 |

(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.7 மற்றும் 9.10 ஆம் பிரிவு புறக்கணிக்கப்பட்டு நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினால் திறைசேரிச் செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் 06 உத்தியோகத்தர்களின் பதவிப் பெயர் 2012 யூலை 01 ஆந் திகதி தொடக்கம் மாற்றப்பட்டிருந்ததுடன் 50 சதவீத தொலைபேசிக் கட்டணப் படி மற்றும் போக்குவரத்துப் படிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் 2012 யூலை 01 ஆந் திகதி தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 30 ஆந் திகதி வரை தொலைபேசிக் கட்டணப் படிக்காக ரூபா 200,500 தொகையும் போக்கவரத்துப் படிக்காக ரூபா 548,510 தொகையும் நிறுவகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது 07 விடயங்களுக்காக 16 சதவீதம் தொடக்கம் 349 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடானது வினைத்திறனை கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின்

ஆண்டறிக்கைகள் முறையே 2013 யூலை 23 ஆந் திகதி மற்றும் 2014 யூன் 09 ஆந் திகதிகளில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) கொள்வனவு நடைமுறைகள்
(உ) பதவியணியினர் நிருவாகம்
(ஊ) ஒப்பந்த நிருவாகம்
(எ) செயற்திட்ட நிருவாகம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2.2.1 | **கணக்கீட்டுக் குறைபாடுகள்**<br><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (அ) | 1983இன் 12ஆம் இலக்கப் பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை ஏற்பாடுகள் கணிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக, மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 274,025 தொகை குறைவாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் மீளாய்வாண்டின் மிகை அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 01.01.2013 அன்று ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 02 மட்டுமே ஆகும். எனினும், இந்த இரு ஊழியர்களுக்கும் பணிக்கொடை வழங்கப்படவில்லை. இத்துடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படும் நிதிசார் கூற்றுக்களில் சம்பந்தப்பட்ட சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. நடப்பு வருடத்தில் எஞ்சியுள்ளவற்றுக்கு சீராக்கல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், நுகர்வுப் பொருட்களின் இருப்பு ரூபா 9,340,426ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரிய நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களின் இருப்பு ரூபா 9,612,559ஆக இருந்தது. அதன் அடிப்படையில் மீளாய்வாண்டின் மிகை மற்றும் இறுதியிருப்பு என்பன ரூபா 272,133இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிசார் நிலைமையின் கூற்றில் நடப்புச் சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாவனைக்குரிய கையிருப்புக்கள் ரூபா 9,612,559ஆக உள்ள அதேவேளை, உருப்படியான சரிபார்த்தல் அறிக்கையின் பிரகாரம் கையிருப்பு ரூபா 9,340,426 ஆகும். இதன் பிரகாரம் புத்தகங்களிலிருந்து ரூபா 272,133ஐக் கொண்ட கையிருப்பின் பெறுமதியை பெறுமதியழிப்பதற்கு முகாமைத்துவச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், இதை நிதியமைச்சின் அங்கீகாரத்தைப் பெறுவதன் பெயரில் பெறுமதியழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| | | |
| 2.2.2 | கட்டிடங்கள், பொறிகள், இயந்திராதி மற்றும் ஆய்வுகூடச் சாதனங்கள் கணக்கில் காண்பிக்கப்பட்ட கிரயப் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டிற்குரிய பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் கிரயப் பெறுமதி பின்வருமாறு மாற்றமடைந்திருந்தது. | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதிசார் கணனி முறைமையில் நிலையான சொத்துக்கள் நிரலில் மீள் மதிப்பிடப்பட்ட சொத்துக்களைப் பதிவுசெய்வதில் கஷ்டமொன்று இருந்தமை யினாலேயே மாறல்கள் இடம்பெற்றுள்ளன. சேவை வழங்குனருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பிரகாரம், மீள்-மதிப்பீட்டினைப் பதிவுசெய்வதற்கு முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான சாத்திய மொன்றுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டமையினால், மாறல்கள் சீரமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படு கின்றது. |

| விடயம் | நிதிக்கூற்றின் பிரகாரம் கிரயப் பெறுமதி (ரூபா) | பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் கிரயப் பெறுமதி (ரூபா) | வேறுபாடு (ரூபா) |
|---|---|---|---|
| பொறி, இயந்திராதி மற்றும் ஆய்வுகூட சாதனங்கள் | 668,100,727 | 694,658,745 | 26,558,018 |
| மரத்தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 44,733,359 | 39,103,373 | (5,629,986) |
| கணனி சாதனங்கள் | 45,913,890 | 42,617,309 | (3,296,581) |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 13,038,343 | 13,893,059 | 854,716 |
| மொத்தம் | 771,786,319 | 790,272,486 | 18,486,167 |

நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளவற்றில் மிதமிஞ்சியதாக அல்லது குறைவாக மேலே உள்ள உருப்படியான சரிபார்த்தல் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள ஆகுசெலவைக் குறிப்பிடுவதன் மூலம் கணக்கீட்டில் தவறுகள் உள்ளது என்பதுடன், ஆதனங்களினதும், பொறிகளினதும் மற்றும் சாதனங்களினதும் கொள்வனவிலும், விற்றொழித்தலிலும் மோசமான கட்டுப்பாடொன்றுள்ளதென்பதும் வெளிப்படுத்தப்பட்டது.

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| | | |
| 2.2.3 | **பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**<br><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (அ) | சில வருடங்களாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட மதிப்பிழந்த காசோலைகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 617,796இனை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புல ஆண்டுகளாக கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள மதிப்பிழந்த காசோலைகளினதும், வேறு கடன்தருனர்களினதும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும், சம்பந்தப்பட்ட தரப்புக்களிலிருந்து பதிலிறுப்பு கிட்டவில்லை. எனவே, கணக்குகளில் புத்தகங்களிலிருந்து மீதிகளைப் பெறுமதியழிப்பதற்கு முகாமைத்துவச் சபையின் அங்கீகாரம் கிடைத்ததுடன், நிதி அமைச்சின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் பெறுமதியழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | பல வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 83,339 கூட்டுத்தொகையான கேள்வி வைப்புக்கள் மற்றும் ரூபா 160,746 கூட்டுத்தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் மீளாய்வாண்டின் போதிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சம்பந்தப்பட்ட வைப்பீட்டாளர்களிடமிருந்து மீதிகளின் உறுதிப்படுத்தலைப் பெறுவதற்கும், முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்துடன் மீளக்கொடுப்பனவு செய்வதற்கு அல்லது வருமானத்தில் சீராக்கல்களை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2011ஆம் ஆண்டின் மே 30ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் கட்டளை இலக்கம் 16இன் பிரகாரம் வெளிநாட்டு புலமைப்பரிசில் உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறிய 18 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 7,810,032 தொகை கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 25ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தங்களை மீறியமை தொடர்பில் அலுவலர்களிடமிருந்து ரூபா 4,069,011 தொகையை அறவிடுவதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்பட்ட போதிலும், அவர்கள் நாட்டை விட்டுச் சென்றதனால் எடுக்கப்பட்ட நடவடிக்கை தோல்வியடைந்தது. மேலும், பிணையாளர்களில் பெரும்பாலானோரும் நாட்டை விட்டுச் சென்றுள்ளதுடன், சிலர் |

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2.2.3 (இ) தொடர்ச்சி | | உயிருடனில்லை. இவ்விடயம் COPEஇல் கலந்துரையாடப்பட்டது. |
| | | 2011 ஜூன் 30 அன்று நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நடைபெற்றதுடன், மீதிகளின் பெறுமதியழிப்பு தொடர்பில் பொது தளக்கோலம் இல.286ஐ நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>ரூபா 3,789,640 கொண்ட பெறுமதிக்கு ஒப்பந்தத்தை மீறிய அலுவலர் தொடர்பில் சட்ட ஆலோசனையைப் பெறுவதற்கு சட்ட மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2006 செப்தெம்பர் 22ஆந் திகதிய 30ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றுநிருபத்தின் கீழ் சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவையில் இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்காகச் செலுத்த வேண்டிய சம்பளமாக 2009ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா 7,030,873 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் 2013 வரையிலும் ரூபா 50,522 தொகை மட்டுமே 06 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டது. | முன்னாள் ஊழியர்களுக்கும், சேவையில் உள்ள ஊழியர்களுக்கும் கொடுப்பனவுக்குரிய சம்பளங்களைச் செயற்படுத்துவதற்காக 2009ஆம் ஆண்டிலிருந்து ரூபா 7,030,873ஐக் கொண்ட ஏற்பாடொன்றுள்ளது. 2010, 2011 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. நடப்பு வருடத்தில் நிதிசார் கூற்றுக்களில் நடைமுறையிலான மீதிக்கு சீராக்கல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 2.2.4 | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**<br><br>பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்வு | |
| (அ) | **1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1)ஆம் பிரிவின் 6.5.3ஆம் பந்தி** | |
| | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் 2013 ஆண்டுக்கான வரைவு | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. உரிய திகதியில் |

| **கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள்** | **கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள்** | **கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள்** |
|---|---|---|
| 2.2.4 (ஆ) தொடர்ச்சி | வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2014க்கான வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். |
| | **FR 371(2)(இ)**<br>உப கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடு நிறைவுபெற்றதும் உடனடியாக தீர்க்கப் படவேண்டியிருந்த போதிலும், நிறுவனத்தினால் 01 மாதம் தொடக்கம் 07 மாதங்கள் வரையிலான காலதாமதத்தில் உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது. | கட்டுநிதியைப் பெறும் நோக்கத்தை நிறைவேற்றுவதில் எது முன்கூட்டியதோ அதன்படி 14 நாட்களினுள் அல்லது உடனடியாக இடைக்கால கட்டுநிதிகளை இணக்குவதற்கு அவசியமான நடவடிக்கை அமுல்படுத்தப்படும். |
| (இ) | **2003 யூன் 02ஆந் திகதிய PED/12ஆம் இலக்க பொது நிறுவனங்கள் சுற்றுநிருபத்தின் வாசகம் 7.4.5**<br><br>மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களின் மெய்மையாய்விற்காக 04 உத்தியோகத்தர்களையுடைய மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருந்த போதும், ரூபா 13,581,898 பெறுமதியான கணனி மென்பொருள் மற்றும் உப பாகங்கள் மற்றும் ரூபா 4,512,594 பெறுமதியான ஏனைய சொத்துக்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவனத்தின் நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 447.4 மில்லியனாகும். சரிபார்த்தலுக்கு நிபுணர் ஒருவரைக் கண்டறிவதற்கு சாத்தியமில்லை என்பதால் கணனி மென்கணியம் உருப்படியாகச் சரிபாாக்கப்படவில்லை.<br><br>மேலும், ரூபா 4.5 மில்லியன் சொத்துக்கள் மொத்த வேறு சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. விடயங்களின் ஆகுசெலவைப் பொறுத்தளவில் ரூபா 500, ரூபா 1,000 கொண்ட சிறிய விடயங்கள் சரிபார்க்கப்படவில்லை. |
| (ஈ) | **2011 ஏப்ரல் 21ஆந் திகதிய MOFP/ERD/2011/1ஆம் இலக்க நிதி, திட்டமிடல் சுற்றுநிருபம்**<br><br>வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு அறிவிக்காமல் ரூபா 38,469,075 | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எதிர்காலத்தில் கிட்டுகின்ற |

| **கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள்** | **கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள்** | **கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள்** |
|---|---|---|
| 2.2.4 (உ) தொடர்ச்சி | பெறுமதியான கனடா செயற்திட்டம் மற்றும் ரூபா 9,471,996 பெறுமதியான இந்திய இலங்கை செயற்திட்டம் முறையே 2012 ஏப்ரல் மாதத்தின் போதும், 2013 செப்தெம்பர் மாதத்தின் போதும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | சகல வெளிநாட்டு கருத்திட்டங்கள் மீது வெளிநாட்டு வள திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| | **2000 சனவரி 19ஆந் திகதிய 380ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்று நிருபம்**<br>**i. வாசகம் 01**<br>ஆலோசனைச் சேவைக்காக முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 2014ஆம் ஆண்டிலிருந்து உசாவுகைச் சேவைகளுக்காக முன்கூட்டிய அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| | **ii. வாசகம் 7.1**<br>ஆலோசனைச் சேவை வருமானத்தில் நேரடியான கிரயம் கழிக்கப்பட்ட பின்னர் 10 சதவீதம் தொடக்கம் 25 சதவீதம் வரையான தொகை நிறுவனத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டு திறைசேரியின் விசேட நிதியத்திற்கு 03 மாதங்களுக்கு ஒரு தடவை அனுப்பப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் பொது திறைசேரியுடன் கலந்துரையாடல்கள் செய்யப்பட்டதுடன், எதிர்காலத்தில் திறைசேரியின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | **2004 பெப்ரவரி 11ஆந் திகதிய DMS/ERST/21-4/தொகுதி iiஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளரின் கடிதம்**<br>ஒரு உத்தியோகத்தருக்கு இரண்டு மாதச் சம்பளம் அல்லது ரூபா 20,000 தொகை என்ற இரண்டிலும் குறைந்த பெறுமதி ஊக்குவிப்புப் படியாக வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012ஆம் ஆண்டிற்காக 307 உத்தியோகத்தர்களுக்கு வழங்கக்கூடிய ஆகக்கூடிய ஊக்குவிப்புப் படி ரூபா 6,140,000ஆக இருந்தபோதிலும், 2013ஆம் ஆண்டின் போது ரூபா 1,802,397 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2013ஆம் ஆண்டிற்காக ஒருவருக்கு ரூபா 27,500 படி 395 உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப்படியாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட அளவினை விட ரூபா 2,962,500 தொகை அதிகரித்து நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | 2004ஆம் ஆண்டில் இந்தத் தீர்மானம் செய்யப்பட்ட போது, நடு மட்ட ஊழியர் ஒருவரின் மாதாந்தச் சம்பளம் ரூபா 10,000 ஆகும். இதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டதுடன், தற்போது நடு மட்ட ஊழியர் ஒருவரின் சம்பளம் சுமார் ரூபா 25,000 ஆகும். மேலும், 2006இன் இல.30 DMS சுற்றறிக்கையின் பிரகாரம், ஊழியர்களின் சம்பளங்கள் அதிகளவு அதிகரிக்கப்பட்டதுடன், |

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2.2.4 (ஊ) தொடர்ச்சி | | முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்துடன் ரூபா 7,500இனால் ஊக்குவிப்புக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டது. 2013க்கான ஏற்பாடு அதே அடிப்படையில் கரிசனைக்கெடுக்கப்பட்டது. |
| 3. | **நிதி மீளாய்வு** | |
| 3.1 | **நிதி விளைவுகள்**<br><br>சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீளாய்வாண்டில் நிறுவனச் செயற்பாடுகளிலிருந்தான விளைவுகள் ரூபா 69,829,343 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 22,628,443ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 47,200,900 அதிகரிப்பினைக் காண்பித்தது.<br><br>இதற்காக 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது பெறுமானத் தேய்வின் அடிப்படையில் திறைசேரி மானியம் பதிவழித்தல் 127 சதவீதத்தினாலும், புனரமைப்பு மற்றும் அபிவிருத்தியின் அடிப்படையிலான திறைசேரி மானியம் பதிவழித்தல் 46 சதவீதத்தினாலும், வருமானம் 30 சதவீதத்தினாலும் மற்றும் ஏனைய வருமானம் 35 சதவீதத்தினாலும் அதிகரித்தமை காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2.2.3 (ஆ)இல் குறிப்பிடப்பட்டவாறு திறைசேரி உதவுதொகை மீது பெறுமானப் பதிவழிப்பினைச் சீராக்குவதன் மூலம், மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டில் ரூபா 39,200,516 வரை தொழிற்பாட்டிலான விளைவுகள் குறைக்கப்பட்டன. இதன் பிரகாரம் நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பின் வித்தியாசம் ரூபா 16,572,073 ஆகும். |
| 3.2 | **பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு**<br><br>சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் நிறுவனத்தின் பகுப்பாய்வு ரீதியான மூலதன விகிதம் பின்வருமாறு. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. |

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| | (see ratio table below) | |
| 4. | **செயற்பாட்டு மீளாய்வு** | |
| 4.1 | **செயலாற்றல்**<br><br>நிறுவனத்தினால் செயற்படுத்தப்படுகின்ற ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (அ) | **தாமதமான செயற்திட்டங்கள்**<br>(i) மீளாய்வாண்டின் போது 07 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதியை விட 03 மாதங்கள் தொடக்கம் 23 மாதங்கள் வரையான தாமதத்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. |
| | (ii) TG12/00/04ஆம் இலக்க செயற்திட்டம் ரூபா 100,000 தொகையில் திறைசேரி நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2006ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2010ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தை கையாளுகின்ற உத்தியோகத்தர் 2010 சனவரி 17ஆந் திகதி தொடக்கம் 2012 சனவரி 16ஆந் திகதி வரை 02 வருட காலம் கற்கை விடுமுறை பெற்றமையின் காரணமாக அந்த செயற்திட்டம் 03 வருட தாமதத்துடன் 2013 திசெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கற்கை விடுமுறை பெற்ற உத்தியோகத்தருக்குப் பதிலாக வேறு ஒரு உத்தியோகத்தரை ஈடுபடுத்தி செயற்திட்டத்தை தாமதமின்றி வெற்றியடையச் | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. |

| விகிதம் | ஆண்டு 2013 | ஆண்டு 2012 |
|---|---|---|
| நடைமுறை | 1.5 | 1.8 |
| திடீர் | 1.5 | 1.7 |

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| 4.1. தொடர்ச்சி | செய்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், கற்கை விடுமுறைக் காலம் 2 வருடங்களாக இருந்த போதிலும் செயற்திட்டம் 3 வருட கால தாமதத்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | |
| (ஆ) | **கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**<br>(i) TG/08/24ஆம் இலக்க செயற்திட்டம் மூன்று ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் ரூபா 2,000,000 தொகையான திறைசேரி நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2011 மே மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2014 மே மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதில் ஒரு ஆராய்ச்சி உத்தியோகத்தர் 2011 திசெம்பர் 09ஆந் திகதி ஓய்வு பெற்றுச்செல்வதற்கு தீர்மானித்திருந்தமையை கருத்திற்கொள்ளாது செயற்திட்டத்தைத் திட்டமிட்டதன் காரணமாக அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன், வேறு ஆராய்ச்சி உத்தியோகத்தரையேனும் ஈடுபடுத்தி செயற்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. |
| | (ii) FP 83ஆம் இலக்க செயற்திட்டம் ஐரோப்பிய சங்கத்தின் யூரோ 683,528 தொகையான நிதியுதவியின் கீழ் 2009 மார்ச் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2012 ஆகஸ்ட் மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தில் காணப்பட்ட நலிவுகள் காரணமாக அந்தச் சங்கத்தினால் நிதியுதவி வழங்குதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன், நட்டத்தை ஈடுசெய்வதற்காக 2014 ஆகஸ்ட் 25ஆந் திகதியில் உள்ளவாறு முதிர்வடைந்த யூரோ 81,097.48 பெறுமதியான வரவுத்தாள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந் நிலைமை நிறுவனத்தின் பின்னடைவின் காரணமாக நிகழவில்லை. ஆனால், பங்குடைமை நிறுவனத்தின் குறைபாடொன்றின் காரணமாகவே நிகழ்ந்தது. கருத்திட்டத்தின் முதன்மையான பங்காளியாக இவ்விடயத்தில் நிறுவனம் சம்பந்தப்பட வேண்டியிருந்தது. எனினும், ஐரோப்பிய ஒன்றியத்துடன் கலந்துரையாடி, இவ் விடயத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| 4.2 | **முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**<br><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>(அ) நிறுவனத்தில் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் ரூபா 36,644 பெறுமதியான செயலாற்றல் பிணை முறி நீடிக்கப்படாமல் மீளாய்வாண்டில் 05 மாத காலத்திற்காக ரூபா 581,608 தொகை தனியார் நிறுவனம் ஒன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 2013 மார்ச் 01இலிருந்து 2013 மே 31 வரை நிறுவனத்திற்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக செயற்றிறன் ஒப்பந்தமொன்றுடன் தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டுள்ளது.<br><br>இதைத் தொடர்ந்து, 2013 ஒகஸ்ட் 27 வரை 03 |

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| 4.2 தொடர்ச்சி | | மாதங்கள் கொண்ட மேலும் காலமொன்றுக்கு செயற்றிறன் ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது. எனினும், இந் நிறுவனத்தின் திறமை நாளுக்கு நாள் சீரழிந்ததினால், ஒப்பந்தக்காரர் ஒருவரைப் பெறுவதற்கு கேள்விகள் கோரப்பட்டன. இன்னொரு நிறுவனத்திற்கு 10.11.2013 அன்று புதிய ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன், இன்னொரு நிறுவனம் தெரிவுசெய்யப்படும் வரை சுத்திகரித்தல் சேவைகளைப் பெறுவதற்காக வேறு வழி இல்லாததினால் செயற்றிறன் ஒப்பந்தமொன்று இன்றி 28.08.2013 முதல் 09.11.2013 வரையிலான 73 நாட்களுக்கு மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனத்திலிருந்து சேவைகள் பெறப்பட்டன. |
| | (ஆ) நிறுவனத்தில் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக குறித்த கொள்வனவு நடைமுறைகளின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்திற்காக விலை கூடிய மற்றைய நிறுவனம் 2013 நவம்பர் 11ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தது. | நிறுவன வளவில் துப்புரவு மீது பெருமளவு தருணங்களில் சூழல் பொலிஸிலிருந்து சார்த்துரைகள் இருந்ததினால், சுத்திகரிப்பு சேவைகளுக்கு மதிப்புவாய்ந்த சொல்லப்பட்ட நிறுவனத்திற்கு சுத்திகரிப்பு சேவைகளுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டது.<br><br>இதே வழியில் 31.10.2013 அன்று நிறுவனத்துடன் சேவை உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப் பட்டது. |
| 4.3 | **பயன்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**<br><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>(அ) ரூபா 1,815,377 கூட்டுத்தொகையான 03 வங்கிக் கணக்கு மீதிகள் 05 வருடங்களுக்கு 03 செயற்படாத நடைமுறைக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்ததுடன், அந்தக் கணக்குகளில் உள்ள பணம் மீளாய்வாண்டின் போது உரிய செயற்பாட்டிற்கு அல்லது ஏனைய வினைத்திறனான நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொகைகளைக் கையகப்படுத்துவதற்கும், முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதன் மூலம் நிறுவனத்தின் வங்கிக் கணக்குக்கு கைமாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| 4.3 தொடர்ச்சி | (ஆ) FP 96ஆம் இலக்க செயற்திட்டம் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ரூபா 1,920,000 தொகையான நிதியுதவியின் கீழ் 2011 செப்தெம்பர் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு, 2013 செப்தெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 654,886 பெறுமதியான இயந்திரம் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 126,910 தொகையினால் அதிகரித்து, மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த இயந்திரம் தேவைகளுக்கு இணங்காமையின் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 25ஆந் திகதி வரையிலும் செயற்பாடற்றுக் காணப்பட்டது. | FP 96 கருத்திட்டத்திற்காக ரூபா 654,886.01க்கு கொள்வனவு செய்யப்பட்ட பழச்சாறு குளிராக்கல் சாதனம் அவசியமான திரிபுபடுத்தல்களைச் செய்யாமல் செயற்திட்டச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட முடியவில்லை. திரிபுபடுத்தல் களுக்கு கருத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியங்கள் போதுமானதல்ல. எனினும், உணவுத் தொழில்நுட்பப் பிரிவின் ஆவியுயிர்ப்புப் பணிக்காக பயன்படுத்தப்படும் சுழலி ஆவியாக்கியின் தொழிற்பாட்டு நடைமுறைக்காக இச்சாதனம் தற்போது பயன்படுத்தப்படுகின்றது. |
| 4.4 | **ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு**<br>கழிவு நீர் சுத்திகரிப்பு இயந்திரக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 10,752,000 தொகையில் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| | (அ) இந்த உப ஒப்பந்தத்தை வழங்குதல் தொடர்பாக சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன், செயலாற்றல் பிணை பெறப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளாமல் உப ஒப்பந்தங்களை வழங்குவது எதிர்காலத்தில் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படும். |
| | (ஆ) உப ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ரூபா 3,648,000 பெறுமதியான முற்பணப் பிணைமுறி 2012 செப்தெம்பர் 20ஆந் திகதி காலாவதியாகியிருந்ததுடன், அதனை நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நிதிப் பிரிவின் அறிவுடன் மட்டுமே உப ஒப்பந்தங்களை வழங்குவதென ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இத்தகைய நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படலாம். |

**1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(இ)இன் பிரகாரம் 2013 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| 4.4 தொடர்ச்சி | (இ) சேவைப் பங்களிப்பாளர்களின் கோரிக்கையின் பிரகாரம் 2013 ஏப்ரல் 23ஆந் திகதி தொடக்கம் 4 மாதங்களுக்குள் இயந்திரக் கூடத்தின் நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2013 மார்ச் மாதத்தின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், இயந்திரக் கூடத்தை செயற்படுத்தும் கைநூல் மற்றும் ஏனைய அறிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 7ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பொறியின் தொழிற்பாட்டுக் கையேடும், வேறு தொடர்பான அறிக்கைகளும் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| 4.5 | **புதவி வெற்றிடங்களின் முகாமை** | |

2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான பதவி வெற்றிடம் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| தரம் | அங்கீகரிக்கப் | உள்ள | ஒப்பந்த | மிகை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 52 | 34 | - | - | 18 |
| மூன்றாம் | 148 | 140 | 12 | 4 | - |
| இரண்டாம் | 106 | 101 | 20 | 15 | - |
| ஆரம்ப | 86 | 60 | 13 | - | 13 |
| மொத்தம் | 392 | 335 | 45 | 19 | 31 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| 4.5 தொடர்ச்சி | | |
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடத்தை அதிகரித்துக் கொள்ளாமல் மூன்றாம் நிலையிலுள்ள பதவிக்காக ஆராய்ச்சி விஞ்ஞானிகளின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி 09 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தப் பதவிகளுக்கே 11 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையின் கீழ் சேர்க்கப்பட்டிருந்தனர். | சேவைத் தேவையின்படி, நிறுவனத்தின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்புக்கு அமைவாக ஆராய்ச்சி விஞ்ஞானிகளை ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிறுவனத்திற்குத் தேவையான சிரேஷ்ட நிலையிலுள்ள பதவியான பிரதான கணக்காளர், பிரதான விற்பனை முகாமையாளர் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளில் 5 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்களின் ஆட்சேர்ப்பு முடிக்கப்பட்டுள்ளது. பிரதம எந்திரவியலாளரின் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆட்சேர்ப்பின் திட்டத்தை திருத்துவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு திருத்தத்தை பெற்று எஞ்சிய அலுவலர்கள் ஆட்சேர்க்கப்படுவார்கள். |
| (இ) | அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களில் நிரந்தர உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்காக வெற்றிடம் காணப்பட்ட போதிலும், நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.<br><br>விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம், எதிர்காலத்தில் ஆட்சேர்ப்புக்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| நிலைமை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| சாரதிகள் | 04 | 03 |
| பயிற்சி | 07 | 02 |
| அரைப் பயிற்சி | 14 | 05 |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02ஆந் திகதிய PED/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.7 மற்றும் 9.10ஆம் பிரிவு புறக்கணிக்கப்பட்டு, நிறுவனத்தின் முகாமைத்துவச் சபையினால் திறைசேரிச் செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் | சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்களாக இந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேலும், முகாமைத்துவ சபையின் |

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| | 06 உத்தியோகத்தர்களின் பதவிப் பெயர் 2012 யூலை 01ஆந் திகதி தொடக்கம் மாற்றப்பட்டிருந்ததுடன், 50 சதவீத தொலைபேசிக் கட்டணப் படி மற்றும் போக்குவரத்துப் படிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அதன் அடிப்படையில் தொலைபேசிக் கட்டணப் படிக்காக ரூபா 200,500 தொகையும், போக்குவரத்துப் படிக்காக ரூபா 548,510 தொகையும் நிறுவனத்தினால் கணக்காய்வுத் திகதியான 2013 நொவம்பர் 30இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகாரத்துடன் 50% படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டது. 2012 மே 22இன் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் இந்த அலுவலர்கள் விண்ணப்பித்துள்ளதுடன், அத்திகதியில் உள்ளவாறு தகைமை பெற்றவர்களாவர். பதவியேற்றங்களைப் பின் திகதியிடுவதன் மூலம் இக்கொடுப்பனவுகள் இணக்கப்படும். |
| 5. | **கணக்குகளின் பொறுப்பும் நல்லாளுகையும்** | |
| 5.1 | **பாதீட்டுக் கட்டுப்பாடு**<br><br>மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது, 1 சதவீதம் தொடக்கம் 349 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடானது வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முகாமைத்துவத்தின் விளைவிலான கருவியொன்றாக பாதீட்டைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 5.2 | **ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்**<br><br>2003 யூன் 02ஆந் திகதிய PED/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.3ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2012ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை தற்போது வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. 2011இன் வருடாந்த அறிக்கை 2013 யூலை 23 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. | தற்போது பாராளுமன்றத்தில் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 6. | **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**<br><br>கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும், கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் மீது விசேட கவனம் கோரப்படுகிறது.<br><br>(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு | இந்த முறைமைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்காக கவனத்திற்கெடுக்கப்பட்டுள்ளது. |

| கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கையின் விடய மேற்கோள் | கணக்காய்வாளர் நாயகத்தின் விவரணம்/ கருத்துரைகள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| 6.0 தொடர்ச்சி | (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு<br>(இ) கணக்கீடு<br>(ஈ) கொள்வனவு நடைமுறைகள்<br>(உ) பதவி வெற்றிட முகாமை<br>(ஊ) ஒப்பந்தங்கள் மீதான கட்டுப்பாடு<br>(எ) திட்ட முகாமைத்துவம்<br><br>ஒப்பம்: டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன<br>பதில் கணக்காய்வாளர் நாயகம் | ஓப்பமிடப்பட்டுள்ளது பேராசிரியர் டபிள்யு.அபேவிக்ரம<br>தலைவர் - முகாமைத்துவச் சபை |